உ

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௪. } பரீதாபி ௵ கார்த்திகை ௴ { பகுதி ௮.

## *உபாத்திம-மாணவர்களுக்கோர் உபதேசம்.

எனக்குக்கிடைத்த இக்கௌரவத்தை, நம் ஈன்றோர்உடன் பிறந்தோர் இவர்கள் நம்முடன் பேசி இன்பமூட்டிப் பாராட்டி வந்ததும், முற்கால தற்கால பாஷைகள் எவற்றிற்குமே கற்பனாலங்காரம் முதலியவை நிரம்பியதால் ஒரு சிறிதும் முடிசாய்த்து நில்லாததும், மேற்றிசைக் கலைஞர்களின் மனத்தையும் கொள்ளை கொண்டு அவர்களையும் அடிமைப்படுத்தும் ஆற்றல் வாய்ந்ததுமான நமது தாய்பாஷைக்கு நீங்கள் செய்த நன்றிமிகு பெருமையாகவே நான் கொள்வேன்.

சிற்றணில்களும் சேதுபந்தனம் செய்ததொப்ப, தேசபாஷாபிவிருத்திக்காகச்செய்யவேண்டியகடமைகளில் நான் செலுத்திய அற்பத்தையும் மதித்து, என்னைப் பெருமைப்படுத்தக் கருதியதாகவும் கொள்வேன். கலாசாலைகளிற் பரிசளிக்கும்போது புஸ்தகத்தின் மேலட்டையின் உட்புறத்தில் ஒட்டப்பட்டிருக்கும் காகிதத்துண்டில் "இன்னாருக்கு, இப்பரிசு யோக்யதைக் கறிகுறியாகவும், மேலும் அபிவிருத்தி ஆவதற்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டும்" என்று காணப்படும் வாக்கியத்தை ஒப்ப, எனக்குச் செய்த உங்கள் வெகுமானம், நான்செய்த அற்பமுயற்சியையும் நீங்கள் அறமதித்தற்கு

*இது திண்டுக்கல் கவர்ன்மெண்ட் டிரெயினிங் ஸ்கூல் அதிகாரிகளின் வேண்டுகோட்கிணங்கி அக் கலாசாலை வருஷோத்ஸவ தினத்தன்று ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் செய்த ஓர் பிரசங்கத்தின் சாராம்சமாகும்.

அறிகுறியாக மாத்திரமேயன்றி மேன்மேலும் நான் உழைப்பதற்கு எனக்கு ஊக்கம் ஊட்டவும் என்று நான் கொள்வேன்.

நம்பாஷையை அபிவிர்த்தி செய்வதில் சிறிது நேரமேனும் நீவிர் சிரமப்படவேண்டுமென்பதே உங்களை என் முழுமனவலியோடும் யாசித்துக்கேட்டுக்கொள்ளும் முதல் விஷயமாகும். வீணன் எவனேனும் "நம் பாஷை முற்றிலும் பூரணமானது.. அதற்கோர் குறையும் இல்லை" என்று சொன்னால், "அவ்வாகடியக்காரனின் மொழி ஒரு சார் உண்மையே ஆயினும் பிழைபட்டதே" யென்பேன்:

தமிழ் எவ்வளவோ உயிருள்ளது தான். தமிழ்க் கிரந்தங்களின் கருத்துக்களையும் சொற்போக்கையும் பிறபாஷைகளுக்கேற்ப இசையும பொருந்தலாம். ஆயினும் அதன் வளர்ச்சி நின்றுவிட்டது விசனிக்கத் தக்கதன்றோ? அவ்வளர்ச்சி குன்றியது சுமார் ஒரு நூற்றாண்டு என மதிக்கலாம் வளர்ச்சி குன்றுவது வயோதிக காலத்தின் அறிகுறி. வயோதிக முதிர்வே சாவு என்று அறிஞர் கூறுவர். ஆதலின் தமிழைப் பின்னும் அலட்சியம் செய்து, மேலும் தளர்ச்சியடையாத வழியை நீங்கள் தேடுவதோடு கூட மீண்டும் உங்கள் முயற்சியினால் அதற்கு இளமை உண்டாக்குவதும் உங்கள் உத்தம கடமைகளில் ஒன்றாகும். இவ்வித முயற்சியில் ஓர் வகைப் படுகுழியில் விழாதீர். பொதுவாக, சென்ற சில நூற்றாண்டுகளாகத் தமிழ் நூல் இயற்றப் புகுவோரின் ஓர் பெருங்குறை யாதெனில், சிறிதறிவு பெற்றபின் மேன்மேலும் அதைவிருத்தி செய்யாது, நம் பண்டைப் புராண இதிகாசங்களை மூலமாகக் கொண்டு, கவிகட்ட ஆரம்பிப்பதே. கவிபாட இவர்கள் சக்தி யற்றவர்கள் என்பது பற்றி நான் இதுசொல்ல வரவில்லை. இவர்கள் அதிசாதுரியமாகச் சொல்ல விரும்பும் விஷயங்கள், தமிழ்க் காப்பிய நூல்களிலும் ஏனைய புத்தகங்களிலும் பரக்க இருக்கின்றன. ஒன்றைப் போலவே பற்பல செய்வது வீணான காரியமே. ஓரே விஷயத்தை அகவலிலும், வெண்பாவிலும், விருத்தவர்க்கத்திலும் பாடுவது ஆக்கியோரின் பெருமையைச் சிறிது காட்டுமேயன்றி நூற்பெருமையையும் விஷயப் பெருமையையும் ஒருபோதும் காட்டாது. ஏனெனில், கற்பனாலங்காரமும் காம்பீரிய நடை

யும் பண்டைக் காவியங்களில் பூரணமாக அமைந்துள. ஆதலின் அவற்றைப் பின்னும் பூரணமாக்க முயல்வது,

புடமிடப் பட்ட பொன் மேல் பொன முலாம் பூசல், அல்லி
மடலில் வெண் நிறத்தைத தீட்டல், மருக்கமழ் கருநெய்தல் மேற்
படநறு மணத்தைத ஊட்டல், பனி உறை வழுக்க லாக்கல்,
அடைவுறு வான வில்லுக் கதிற்கிலா வர்ணம சேர்த்தல்.

போலாகும். காலதேசவர்த்தமானத்தை உணர்ந்த அறிஞரும் அவர்கள் அறியாமைக்கு இரங்கி வெறுப்பர்.

மகா பரிசுத்தமானதும், தொன்மையும் கடவுட்டன்மையும் வாய்ந்ததும் எவரையும் வசீகரம் செய்யும் வன்மை படைத்ததுமான நம் தாய்ப் பாஷையை அபிவிருத்தி செய்து யாவர்க்கும் பயனுறவும், அதில் ஆர்வமூட்டவும் உண்மையில் விரும்புவீர்களானால், நீங்கள் புதிய வழியில் உழைக்கவேண்டும். அவ்வழி இன்னதென இனிப்பிறிதோர் இடத்தில அறிவிப்பேன்.

தாய்ப் பாஷையின் வலிமை தான் என்னே! அந்நிய அரசாங்கத்தாரால் அது முற்றும் ஒழிக்கப்பட எவ்வளவோ முயறசிக்கப்பட்டகாலததிலும, அது தன் வன்மையையே காட்டித் தலை தூக்கி நின்று முனனினும் பனமடங்கு சோபிககும் என்பதற்குச சமீபத்தில் நாம அறிய நடநத ஓர் ஆச்சரியகரமான விசேஷ சமபவத்தையே சான்றாகக் குறிப்பேன்:—

பிரான்ஸ் தேசத்தின் ஒரு பாகமாகிய லோரைன் மாகாணத்தை ஜர்மானியர் வசப்படுததியவுடன், அம்மாகாண நதாக்குள், ஒரு காலத்தில் அந்நாடு, பிரசித்தி பெற்ற பிரான்ஸ் தேசத்துச சொந்தமாக இருந்ததென்னும் ஞாபகம் அடியோடு ஒழியுமாறு, லோரைன் பாஷையை வேர்களைநது வெந்நீர் ஊற்றவேண்டுமென்றும், அவ்வாறு செய்தாலல்லது. பூர்வீகப் பிராஞ்சியப் பற்றை ஒழித்து ஜர்மனிய தேசபக்தியை அவர்களுக்குள ஜனிக்கச் செய்யக் கூடாதென்றும் ராஜதந்திர ஞானத்தால், கண்டு சகல வைபவங்களும் லோரைன் வாசிகளுககுத் தங்களாலேயே கிட்டியவென்று பின்னேர் கருத ஏதுவாகுமாறு, அத்தேசத்துப் பூர்வீகரை உடைய பாஷைகளை உணர்த்தும லோரைன் பத்திரிகைகளை, அகற்றி

யது மன்றி அப்பாஷையைச் சிறுவர்க்கும் கலாசாலைகளிற் கற்பிக்கக் கூடாதென்று கண்டிப்பான அரசாங்கஉத்தரவிருந்து வந்ததைப் பலர் அறியாதிருந்திருக்கலாம். பள்ளிக்கூடங்களில், தவறி லோரைன் பாஷையிற் பேசும் உபாத்திமார்க்குக் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டது மன்றி அவர்கள் அமர்ந்த கலாசாலைகள் பெறும் சர்க்கார் நன்கொடையும் நிறுத்தப்பட்டது. முப்பது ஆண்டுகளாக அவர்கள் பட்ட அவஸ்தை மூன்றுவாரங்களுக்கு முன்பு தான் நீங்கிற்று. எவ்விதமெனில்: ஜெர்மானி சக்ரவர்த்தினி லோரைனில் உள்ள ஓர் பாலிகா பாடசாலைக்கு விஜயம் செய்தபோது ஆங்கு படித்த சிறுமியரில் ஒருத்தியின் வணக்கம், புத்திசாலித்தனம், இனிய குரல், மிருது பாஷணம், சுத்தஉடை ஆதிய இவற்றில் ஈடுபட்டவராய் அவளை நோக்கி "குட்டி! நீ விரும்புவதைக் கேள். யான்உனக்கு அளிப்பேன்" என மகிழ்ந்து கூற, அச்சிறுமி முழந்தாளிட்டு நாக் குழற, உடல் இளக, "நான் கேட்பதை அளித்தல் தங்களால் ஆகுமோ?" என விநயமாய்க் கேட்டாள். இது கேட்ட அரசி புன்னகை செய்து "சக்ரவர்த்தினியாகிய என்னால் ஆகாததும் உண்டோ? நீ விரும்பிய எதையும் கேள். கொடுத்தே தீர்வேன் என அரசியாகிய நான் செய்த வாக்குறுதியை நம்பு." என்று கம்பீரமாகச் சொன்னார். பரிவாரங்களும் பள்ளியின் உபாத்திமார்களும் சிறுமியின் விருப்பம் எத்தகைத்தோ! என்று, ஆவலுடன் அவளுடைய உதடு அசைவதை எதிர்பார்த்தனர். சிறுமியோ மெல்லிய குரலுடன் "தாயே! என் தாய் என்னுடன் பேசும் பாஷையில் எங்களுக்குக் கல்விபயிற்றத் திருவுளம் உவந்து ஆக்ஞாபிக்க வேண்டுகிறேன்" என்று பிரார்த்திக்க யாவரும் பிரமித்தனர். மகாராணியும் இவ்வணம் செய்வது ராஜாங்க விஷயமானதால் தன் சக்திக்கு மிஞ்சியதென்று பெரிதும் கலங்கினள். ஆயினும் அது மகாராணி கொடுத்த வாக்காதலால் அதுபிறழாவண்ணம் நிறைவேற்றியே தீரவேண்டி வந்தது. சிறுமி தன்முன் முழந்தாளிட்டது போல் தாமும், தம் கணவனை ஆயினும், சக்கரவர்த்தியார் முன் முழந்தாளிட்டு நின்று அப்பெண்ணின் கோரிக்கையை ஈடேற்ற இறைஞ்சினர். அச்சம்பவம் அரசர் மனத்தையும் இளக்கியதால், "அவ்வண்ணமே ஆகுக" என்று அவரும் ஆக்ஞாபித்து விட்டார். நிற்க.

ஆனால் நமதுராஜாங்கத்தினரோ பாஷா துவேஷ மாத்திரமல்ல. மதத்துவேஷங்கூட இல்லாதிருக்கிறார்கள். இவ்வித சாதகம் இருந்தும்,கூட நம்பாஷையை நாம்விர்த்தி செய்யாதிருந்தால் அதனினும் அறியாமைக்கு அறிகுறி வேறு என்ன இருக்கிறது! நமதுபாஷைக்கு மாற்றாந்தாய்போல் இதுவரை நடந்துவந்த விண்டிக் விநேட்டிலுள்ள கனவான்களும் நம்பாஷைக்கு உண்மைத்தாயாகி இரண்டு மூன்று மாதங்களாக தேசபாஷையை விருத்திசெய்ய வேண்டுமெனவும், உயர்ந்த சம்பளத்தில் ஆசான்களை நியமிக்க வேண்டுமென்றும் செய்யும் ஆலோசனைகளாலும்,பேசும் பேச்சுக்களினாலும் வெளி ஆவதால் இன்று தொட்டாவது விடாமுயற்சியுடன் நம் பாஷையை நாம் விருத்திசெய்யாவிடில் பழிச்சொல் நமதேயாகும்.

அறியாமையினால் தமிழை இகழ்ந்த திரிவோரும் சிறிது காலத்திற்குள் அதன் இயற்கை வசி வனப்பில் ஈடுபட்டு அதற்குத் தொண்டு செய்வார்களென்று நான் துணிந்து கூறுவேன். நான் தமிழனும் தமிழ்ப்போதகனும் ஆதலால் இவ்வாறு தமிழிற்கு இல்லாப் பெருமையை ஏற்றி உரைககிறேன் என்று எவரும் எண்ணற்க. அப்படி எவரேனும் கருதுவீரேல் உம்மிலும் மோசம் போனவர் எவருமிலர். தமிழ் தாய்ப்பாஷையாய் இருப்பதோடுகூட, இச்சபை தமிழர் நிரம்பியதாயும், நம் பிற்கால அபிவிருத்திக்கு அப்பாஷையே சாதனமென்று நான் அறிவதாலுமே அவ்விதம் கூறினேன். நான் துருக்கனயிருந்து என் வாழ்நாள் கழிக்கும் இடமும் துருக்கிஸ்தானமாகவே இருப்பின் துருக்கிபாஷையையே மேம்படுத்திக் கூறுவேன்.

சரித்திர அறிவுடையார் தேசபாஷையானது, அத்தேயத்தார் அடைந்த சிறப்பைப்பற்றியே பெரும்பாலும் அபிவிருத்திஅடைந்து வருகின்ற தென்றும், அரியமுயற்சி யாவும் சித்தி பெறுவது அத்தேச பாஷையில் எழுதப்பட்ட சிறந்த இலக்ஷிய கிரந்தங்களாலேயே என்றும் கூறுவர். ஆதலின், தேசத்தின் பெருமையும் தேசபாஷையின் பெருமையும், பாலும் தயிரும் போலவும், பீஜாங்குர நியாயமாகவும், ஒன்றுக்கொன்று ஆதாரமாய் இருக்கின்றன:

இலியட்யுத்தம் ஹோமர் மகாகவிக்கு உற்சாகத்தையும்,ஹோமர் இயற்றிய இலியட், பின் வந்த கிரேக்கருக்கு மன எழுச்சியையும்

உண்டாக்கியது. ட்ரேக், (Drake) பார்பிஷர் (Forbisher) ராலி (Raleigh,) Armada வில் ஐயமுற்றோர் முதலியோரின் துணிகரச் செய்கையே ஷேக்ஸ்பியர், பென்ஜான்ஸன் ஸ்பென்ஸர் ஆகிய மகாகவிகள் வழிவந்த நூற்றுக்கணக்கான பாவலரும் மற்றோரும் சிறக்க ஆதாரமாயிருந்தது. அவர்கள இயற்றிய அரிய கிரந்தங்களே நாளை வரை ஆங்கிலேயர் அடைந்துள்ள சீருக்கும் சிறப்புக்கும் மூலமாக இருக்கின்றன. நிற்க.

உங்களில் அநேகர் ஏன் பங்காளம் பம்பாய் மாகாணங்கள் ஏனையவற்றினும் எதிலும் தலைமைவகித்து முற்படுகின்றன என்று ஆச்சரியப்படலாம். சுமார் பத்து வருடங்களுக்குமுன் பாண்டவநாத ஸிம்மம் என்னும் வங்காளியோடு நான் செய்த சம்பாஷணையிலேயே இதன் உண்மையை அறியலானேன். சென்னையில் எத்தனை பீ. ஏ. பட்டதாரிகளுண்டோ அதனினும் அதிகமான எம். ஏ. பட்டதாரிகள் பங்காளத்தில் உண்டாம். இதற்குக் காரணம் அவர் பங்க பாஷாபிவிருத்தியே என்றார். அறிவு நூல்கள் யாவும் மொழிபெயர்க்கப்பட்டும் முதல் நூல்களும், பிரசுரிக்கப் பட்டும் விட்டதால் ஆங்கில அறிவு சிறிதேனுமின்றியே, பூகோள ககோள கணித ரசாயன பூத பௌதிக ஸ்தாவரமாதிய சாஸ்திரங்களைக் கற்க அந்நிய பாஷை பயில 10, 12 வருஷம் கழிக்காமல், அற்பக் குடியானவனும் எளிதில் கற்றுணர அங்கு சாத்தியமாயிருக்கிறதாம். நம் நாட்டு நிலைமையைச் சிறிது கவனித்துப் பாருங்கள்: புத்தி கூர்மையும் பயிற்சியுமிக்குடையோருமான பிள்ளைகளிற்பலர் வருடந்தோறும் சர்வ கலாசாலைப் பரீக்ஷைகளில் தோற்பதையும் அவரினும் சாமர்த்தியத்திற் குறைந்த அநேகர் தேறி வருவதையும் பிரத்யக்ஷமாக நான் கண்டிருக்கிறேன். இதற்குக் காரணம் சாமானியமே. நான் கூறியபின் ஆச்சரியப்படுவீர்கள். அந்நிய பாஷையாகிய ஆங்கிலத்தில் தம் உட்கருத்தை வெளியிடக் கூடாமையே என்க. "உஷ்ணமானி" என்ற "தர்மாமிடர் செய்யும் விதம் வரைக" என்ற கேள்விக்கு விடையாக "Get a glass blower and blow him into a pipe" (அதாவது கண்ணாடியை ஊதுவோனைப் பிடித்து அவனை ஒரு குழலாக்கு) என்ற முதல் வாக்கியத்தை எழுதுவோர் பல்லரை நான் கண்டிருக்கிறேன். அவர்கள் சொல்ல விரும்பியது

"Go to a glass-blower and get him to blow a pipe for you") (கண்ணாடி ஊதுவோனைக் கொண்டு உனக்கு ஓர் குழல் செய்து தரச் சொல் என்பதே,) இவ்விரண்டு வாக்கியத்திற்கும் எவ்வளவு பேதம் இருக்கிறதென்று பாருங்கள்! ஆங்கிலபாஷையில் தன் கருத்தைப் பாஷா இலக்கணத்திற் கேற்ப இவன் எழுதாததால் தோற்கவும் இவனிலும் தாழ்ந்தவனாயினும் ஆங்கிலம் சரியாய் வரையக் கற்றதால் ஒருவன் தேறவும் பிறபாஷை யன்றோ காரணமாக இருந்திருக்கிறது.

இன்னமும், மகாபாரதத்திற் காணப்படும் ஸ்திரீ புருஷர்களின் பெயரும் அக்காவியத்தடங்கும் விஷயங்களும் முற்கால தற்கால மேற்றிசைச் சரிதங்களில் இல்லை யென்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். இவ்வாறு இருந்தும்கூட தன் தாயிடமிருந்து ஆவலோடு கவனமாகக் கற்றுணர்ந்த 10 வயதுள்ள பையனும் பாரதத்தில் ஆலசிய மின்றி நேர்விடை பகர்வதையும், 20, 25 வயதாகியும் மெற்றிகுலேஷன் பரீக்ஷையில பையன்கள் தோல்வி யடைவதையும்பற்றி விசாரிக்கக் காரணமே யில்லை.

என்ன அக்கிரமம்! ஆங்கிலம் அறியாக்குறை ஒன்றுபற்றியே, மேன்மேலும் அறிவை வளர்க்காத பழம் பாடங்களையே படிக்கவிதிக்கப்பெற்றோரின் நிலை எத்துணை பரிதாபத்திற் கிடமானது! பன்முறை தோல்வியடைந்த மனச்சலிப்பால் பள்ளிப்படிப்பை நிறுத்துவோர் பலரை நான் கண்டிருக்கிறேன். பங்காளம் பம்பாயிலோ முக்கிய பாடமாகிய இங்கிலீஷ் இலக்கிய இலக்கணங்களைத் தவிர பிறபாடங்களைத் தங்கள் சுயபாஷையிலேயே பரீக்ஷையில் விடையளிக்கலாமாம். நமது துர்ப்பாக்கியமோ, எட்டு வயதில் ஆங்கிலேயச் சிறுவன் உணரும் பூத பௌதிக ரசாயன சாஸ்திரங்களைப், பத்து வருஷம் ஆங்கிலம் கற்கப் பாடுபட்டு 16 வயதுக்கும் மேல் அரைகுறையாய் உணர வேண்டியதாயிருக்கிறது. அந்நூல்கள் தமிழில் வரச்சிறிதேனும உதவு வீராயின ஏழை மாணவரின ஆயுட்காலத்தில் 10 வருஷ சிரமத்தைக் குறைத்த புண்ணியம் உங்கட்குண்டு. அந்நூல்கள் நம் பாஷையிற் பரவவும் பெண்டிரும் அதை உணரவும் செய்வீராயின் அப்பொழுதுதான் நீங்கள் மேடையேறிப்பேசுவதும் கேட்பதும் சித்திபெறும். அப்பொழுதுதான் உங்களுக்கும் பெருமை. அன்றுதான் நம் சந்ததியும் முன்னுக்குவரும். நாடும் மேம்படும். (இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

சிவமயம்.

# பாட்டியல்.

---

இயற்றமிழ் இலக்கணமைந்தனுள் ஒன்றாகிய யாப்பிலக்கணத்துக்கு அங்கம் போன்றதும், பஞ்ச இலக்கணங்களையும் பூர்த்திசெய்யத் தோன்றிய ஒழிபியல் போன்றதுமாயது பாட்டியலென்பது. இதனை முற்காலத்துப் புலவர்களும் பிற்காலத்துப் புலவர்களும் பொன் போற் போற்றி வளர்த்தார்கள். இக்காலத்தார் பலர் போற்றாது கைவிட்டிருக்கின்றனர். முற்காலத்துப்புலவர்களும் பிற்காலத்துப் புலவர்களும் பொன்போற்போற்றி வளர்த்தார்களென்றமைக்கு அவர்களியற்றிய பன்னிருபாட்டியல், இலக்கணவிளக்கப்பாட்டியல் முதலியவை சான்றுகளாம். இக்காலத்தார் பலர், பாட்டியலைப் போற்றாது கைவிட்டிருக்கின்றனர் என்பதற்கு அவரியற்றுஞ் சிறப்புப்பாயிரம் முதலியவை சான்றுகளாம். பாட்டியலைப் போற்றாது கைவிடுதல் ஆராய்ச்சியின்மை யானோ, அன்றிப் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே" எனனுஞ் சூத்திரங் கருதியோ, யாதோ அறியேன். ஆராய்ச்சியின்மையா லெனின், அறிவின்மை வெளிப்படும். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே" என்னுஞ் சூத்திரங் கருதியெனின், அது நியாயமன்று. அச்சூத்திரம் எண்ணியபடி இலக்கணங்களைத் தள்ளலுங் கொள்ளலுங் குறிக்க வெழுந்ததன்று. காலமாறுபாட்டில் பழையவும் புதியவுமாகிய இலக்கணங்கள் சில, முறையே கழிதலும் புகுதலுந் தெரிக்க வெழுந்தது. "பழையன கழிதலுக்குப் பழைய இலக்கணங்களிற் சிறிதும், பயன் படாச்சிலவும் புதியன புகுதலுக்குப் புதிய விலக்கணங்களிற் பெரிதும் பயன் படுஞ் சிலவும் நீங்கலும் நுழைதலு முரிய" எனப் பொருள் கொள்க. ஆகவே, இக்காலத்துக்குச் சிறிதும் பயன்படாப் பழைய இலக்கணங்கள் சில விடலும் இன்றியமையாதனவாய்ப் பயன்படும் புதிய விலக்கணங்கள் சில தழுவலுஞ் சிறப்புடையன வென்க. இவற்றானன்றோ ஆசிரியர் பவணந்தி முனிவர் தொல் காப்பியத்துக்கு முரணாவிருக்கவும் "அ ஆ உ ஊ ஓ ஔ யம் முதல்" முதலிய சூத்திரங்கள் சில செய்தருளினர். இவையிருக்க.

பாட்டியல் கூறும் விஷயங்கள் மங்கலப் பொருத்தம், சொற் பொருத்தம், பாற்பொருத்தம், வருணப்பொருத்தம், உண்டிப்பொருத்தம், தானப் பொருத்தம், அக்கரப் பொருத்தம், நாட் பொருத்தம், கதிப்பொருத்தம் கணப்பொருத்தம் ஆகிய பத்தி னிலக்கணமும் அவை பொருந்தும் அகலக் கவியின் இலக்கணமும்பிறவிலக்கணங்களுமாம். பொருத்தங்க ளொவ்வொன் றும் உட்பிரிவுகளுடையன. அவற்றுள் நன்மைபயப்பன சில; தீமைபயப பன சில. பொருத்தவிலக்கணங்களே முக்கியமானவை. மற்றைய இலக் கணங்கள் அவை பற்றி வந்தவை. இவ்விஷயம் பாட்டியல் ஆராய்வார்க்கு வெளிப்படையாம். ஈண்டுப் பொருத்தமாவது அகலக் கவிக்கும் அகலக்கவி நாயகனுக்கும் பொருந்தும் பொருத்தமாம். இதனை,

"விரித்தபா மகட்கும் வேட்டு மிறைக்கும்
பொருத்தமீ ரைந்து போற்றல் வேண்டும்"

எனவரும் சூத்திரத்தாலறிக. பொருத்தங்கள் பத்தும் அகலக் கவியின் முதற் சீரில் அமைவனவாம். இதனை,

"மங்கலஞ் சொற்பால் வருண முண்டி
தானமக் கரநா டப்பாக் கதிகண
மானவீ ரைந்து மம்முதற் சீர்க்குப்
பொருத்த மென்னத் தெரித்தனர் புலவர்"

என்பதா லறியலாம். நற் பொருத்தமும் தீய பொருத்தமும் முறையே நன்மை தீமையை விளைவிக்கத் தக்கன வென்பது இலக்கண விளக்கப் பாட்டியல் கணப் பொருத்தங் கூறும் நாற்பதாவது சூத்திர வுரையின் கீழ்,

"நீரது கணமே சீர்சிறப் பெய்தும்
தீயது கணமே நோயது சேரும்
அந்தர கணமே வாணாள் அகற்றும்
சந்திர கணமே வாணாள் தருஉம்
சூரிய கணமே வீரியம் போக்கும்
மாருத கணமே சீர்சிறப் பகற்றும்
நிலக்கணந் தானே மலர்த்திரு விளங்கும்"

என்றார் மாமூலர் என்றதனுனும், ஒதிய வென்ற மிகையானே கண நாட் பொருத்தமுங் கொள்க. - அவையாமாறு:—

"வருண கணமே சதய மென்ப
சந்திர கணமே மிருக சீரிடம்
அந்தர கணமே புனர் பூச மாகும்
வாயு கணமே சோதி யாகும்
சூரிய கணமே பூச மென்ப
தீக்கணந் தானே கார்த்திகை யென்ப.
யமான கணமே பரணி யென்ப
பூமி கணமே கேட்டை யாகும்"

எனக் கண நாட் கூறி,

"நிலையே செல்வஞ் சூலைநல நீக்கல்
கொலைபிணி நன்மை யின்பம் கூறே"

என இந்திரகாளியார் பலமுங் கூறியவாறு அறிந்து கொள்க என்றதனுலும், மற்றை நற்பொருத்தம், தீய பொருத்தங்கட்கு ஆராய்ச்சியானுமறிக. மற்றையிலக்கணங்களுங் கொள்ளத் தக்கன வெனவு மறியத்தக்கன வெனவு மாராயின் விளங்கும். பத்து நற் பொருத்தங்களும் அகலக்கவிக்கு வேண்டுவன.

இதனை "கூறிய விலக்கணங்களிற் குறைபா டின்றித்
தேறிய மூவகைச் சீர்முத லாக
அகலக் கவிதா னமையு மென்ப"

எனுஞ் சூத்திரத்தானு மறிக. இங்ஙனம் பாட்டியல் கூறுவதானே அகலக் கவிபாடுவோர் பாட்டியல் கற்றல் 'கடமையாகின்றது. அகலக்கவி பாடுவோர் அகலக் கவிபாடுவ தெதற்கு? அகலக் கவிநாயகனுக்கு நன்மைக்கா தீமைக்கா? நன்மைக் காயின் இக்காலத்துக்கு மேலே கூறியபடி பயன், பயனில்இலக்கணங்களுள் பாட்டியல் பயனுளவிலக்கணமாதல் தெரிக. இதனுல் பாட்டியல் தழுவத்தக்க தென்று சித்தித்தது. இது நிற்க.

இடைச் சங்கக் காலந் தொட்டு நிலை பெற்றுத் தன்னொளி குன்றுதிருக் கின்ற அரிய பெரிய தொல்காப்பியத்தின்கண் பாட்டியலில்லையே. யாங்ஙனம் பாட்டியல் சிறக்கு மென்பாருமுளர். அவருரை வெற்றுரையே யா

மென்க. எங்ஙனமெனில் விளம்புவல். தொல்காப்பியம் அகத்தியத்தின் வழி நூலாம். அகத்தியமோ சிதைந்து கிடந்த பழைய விலக்கணங்களை யொருவழிப்படுத்திக் கூறியதோர்நூல். இவை யிரண்டுந் தமிழ்தோன்றிய ஞான்று உடன் தோன்றியவை யல்ல. ஆகவே தொல் காப்பியத்தின் கண் பாட்டியலில்லாமை பற்றிப் பாட்டியலுக்குச் சிறுமை வந்திடாது. பஞ்சவிலக்கணங்களுந் தமிழ் தோன்றிய காலத்துடன் தோன்றியன வென்பதொரு தலை. அக்காலத்தே மேலுரைத்தபடி பஞ்ச விலக்கணங்களையும் பூர்த்தி செய்யத் தோன்றிய வொழிபியல் போலப் பாட்டியலுந் தோன்றிற்று. இஃதுண்மை யெனல் ஆசிரியர் அகத்தியனார் பாட்டியல் செய்தருளினமையானே இனிது விளங்கும். ஆசிரியர் அகத்தியர் பாட்டியல் செய்தருளினது பன்னிரு பாட்டியலில் தானப்பொருத்தங் கூறும் அகத்தியர் பாட்டியல் சூத்திரங்களானறிக. அச்சூத்திரங்களடியில் வருவன கண்டு கொள்க.

(1) "குறிலொடு நெடிலுங் கூட்டி நின்ற
ஐ உள இரண்டும் இ உ அடக்கிப்
பால குமார வரசு மூப்பு
மரணமென் றைவகைத் தானம் வகுத்தனர்"

(2) "முன்பிற் செய்யுண் முதலெழுத் ததற்குப்
பொருத்தமும் விருத்தமும் பகையுங் கொளலே"

கடைச் சங்கப் புலவர்களும் ஆசிரியர் அகத்தியனார் போலவே தம் காலத்தும் வழங்கிய பாட்டியலைக் கொண்டு பாட்டியல் பல செய்தருளி நிலவு வைத்தார்கள். இது பன்னிரு பாட்டியல் இலக்கண விளக்கப் பாட்டியல் நவநீத பாட்டியல் முதலியவை யாராய்ந்தார்க் குண்மையாம். மேற்கண்ட பாட்டியல் பல வேற்றரசர்களால் அக்கினிக்கிரையாக்கப் பட்டன. இரையாக்கப் பட்டாலென்? தப்பியவை சில. அவற்றை முதனூலாகக் கொண்டு பிற்காலத்துப் புலவர்கள் பாட்டியல் பலவியற்றியுள்ளார். அவை யிக்காலத்து வழங்கி வருகின்றன. நவமாய்ப் பாட்டியல் தோன்றியதன்று. ஈண்டு அவருரை வெற்றுரையாய் முடிந்தது காண்க.

இங்ஙனம்,
அ. முத்தையா முதலி,
உபாத்தியாயன், பரங்கிப்பேட்டை.

# திருவேரகப்பதிகம்.

முத்தமி ழுணர்ந்த உத்தமர்காள்!

சிரகப்பதியா மேரகத்திடத்தும் நினைவோரகத்தும் திருக்கோயில் கொண்டருளும் தண்ணளி வாய்ந்த சாமிநாதப் பெருமான்மீது, ஓர்பாமாலை பாடித் தந்தருளவேண்டு மென்று யானும் பள்ளியக்கிரகாரம் கனம் சிங்காரவேற் பிள்ளை யவர்களும் வேண்டிக் கொண்டதற் கிணங்கிய நமதாப்தர் கனம் வி. சாமிநாதப் பிள்ளை அவர்கள் பெரிது முவந்து இரண்டு தினங்கட்குள்ளேயே பாடி முடித்துதவினர். அந்த பதிகத்தைக் கண்ட சதாவதானம் பிரம்ம ஸ்ரீ சுப்பிரமண்ணிய ஐயரவர்களும் ஸ்ரீலஸ்ரீ கந்தசாமிச் சுவாமிகளுமே மகிழ்வுற்று சாற்றுகவிகள் தந்தார்களென்றால் யான் வியப்படைதல் பெரிதேயோ? இத்திருவேரகத் திருப்பதிகத்தைப் பல்லோருங் கண்டு பரமானந்தங்கொள்ள வேண்டுமென்ற ஒரு பேரவாவினால் இப்பாருவில் வெளியிடலானேன். என தாருயிர் நண்பர் கனம் பிள்ளையவர்கட்கு முருகன் திருவருள் புரியப் பெரிதும் வந்தியா நிற்கின்றேன். சுபம்.

"முருகவிலாஸ்"
கருந்திட்டைக்குடி.
27—11—12,

இங்ஙனம்,
கரந்தை முருகேசன்.

## முகவுரை.

திருவேரகத்துத் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யுள்ள ஸ்ரீ சாமிநாதப் பெருமான் சன்னிதியி லோர் நாள் பூமாலை சூடிய அலங்காரக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தபோது, என் மனத்து ஓர்பாமாலைசூட்டிமகிழவேண்டுமென அடங்கா அவா எழுந்துமுதிர்ந்தது.

இவ்வாண்டு விருச்சிக ரவிக் கார்த்திகை விசேடத் தன்றே இதனைப் பூர்த்தி செய்ய வெண்ணி இரண்டொரு நாள் முன்னரே, என்து நண்பர் கனம். வி. சாமிநாத பிள்ளையவர்களுக்குத் தெரிவித்தேன். அன்பர்கள் வேண்டு கோளினை யென்று மறுக்க இசையாத அவர்கள் உத்தம குணத்தினாலோ, அன்றி, இறைவன் பணியிற் றமக்குள்ள இயற்கை அன்பின் முதிர்ச்சியினாலோ,வெகு விரைவிற்பாடி யிதனை அக்கார்த்திகைக்கு முதனாளே என் மனப்படி தந்தருளினார். இதனை "மூத்ததமிழான் வைதாரையும் வாழவைக்கு" மொய்தார்க் கடம்பன் திருத்தாளிற் சூட்டி மகிழ்தரனாயினேம். இங்ஙனம், எனது எண்ணத்தை இனிது நிறைவேற்றிய பிள்ளையவர்கட்கு என்றும் நன்றி யறிதலுடைய வனாயிருக்கின்றேன்.

இது, முருகக் கடவுளிடத்துப் பத்தி புரியும் பலர்க்குந் தோத்திரபாடமாக விருப்பது உசித மெனக் கொண்ட பல நண்பர்கள் விருப்பதின்படி அச்சிட்டு வெளிப்படுத்தினேன்.

இங்ஙனம்
ப. சிங்காரவேற் பிள்ளை.

## சாற்றுக்கவிகள்.

தஞ்சை சதாவதானம், பிரமமஸ்ரீ
சுப்பிரமணிய ஐயர் அவர்கள் இயற்றிய
வெண்பா.

சாமிநா தப்புலவன் சாத்திஞ னேரகத்துச்
சாமிநா தப்புலவன் றண்மலர்க்கு—மாமிகவே
நாவொாற் றுமைதா னயக்கப்பா மாலையைப்..
பேரொாற்று மையும் பெரிது.

---

தஞ்சை கருந்திட்டைக்குடி
ஸ்ரீலஸ்ரீ. கந்தசாமிச் சுவாமிகள் என விளங்கும்
கருணைப்பிரகாச சுவாமிகள் அருளிய
நேரிசை வெண்பா.

ஏரகம்வா ழெம்பெருமா னின்புறவே யோர் பதிக
நாரகததாற் சொற்று னயந்தேவரும்—தாரகமாய்க்
கொண்டருள விஸ்வலிங்கக் கோமா னருள் கரந்தைத்
தண்டமிழ்தேர் சாமிநா தன்.

---

# *திருவேரகப் பதிகம்.

## காப்பு.

செம்மைபெற வேசெய் திருவே ரகப்பெருமா
னம்மையா ளுஞ்சாமி நாதனடிக்—கிம்மையிலே
சொற்பகவி நாயடியேன் சொல்லுதற்கு வல்லபை சேர்
கற்பகவி நாயகன்றாள் காப்பு.

## நூல்.

சீர்மலி கற்பக் காநிழல் வைகுந் தேவுமற் றவருமே திகைத்துச்
சூர்மலி யவுணப் பகையினுக் கஞ்சித் துயர்கொடு நினைவணங் கிடவிப்
பார்மலி குழவிப் படிவமா யுதித்துப் பகைகெடுத் தவவெனக் கருள்வாய்
நார்மலி யடியர்க் கெளியனே சாமி நாதனே பரமசற் குருவே. (1)

ஆலமோ விழிமற் றமுதமோ மொழியென் றன்புட னனுதின மடவார்ச்
சாலமே [illegible]கழ்ந்து காமவெஞ் சலதிச் சுழியிடைத் தலைதடு மாறிக்
காலமோ வீணுக் கழிந்திடா வகை நீ கருணைசெய் நாளெனக் குளதோ
ஞாலமே புகழு மேரகச் சாமி நாதனே பரமசற் குருவே. (2)

---

* ஆக்கியோர் தஞ்சைக் கரந்தை "வித்யா நிகேதன சபை"க் காரிய தரிசியார் நண்பர் கணம் வி. சாமிநாதப் பிள்ளை அவர்களாவர்.

எண்ணிலாச் சனன மெடுத்தெடுத் திளைத்து மிவ்வுடல் பொறையென வெ
தண்ணலே நின்சே வடியினைக் கருதா வகந்தையி னுட்களை வீணாப் [ண்ணு
பண்ணாரு வகையிப் பாலியேற் குண்டாம் பரிசுள மகிழ்ந்தருள் புரிவாய்
தண்ணிலாத் தவழு மேரகச் சாமி நாதனே பரம சற்குருவே. (3)

ஆதியே பரமா னந்தவா ரிதியே யன்பர்க டம்முளத் துறையுஞ்
சோதியே தூய நீதியே யிமவான் றந்தருள் சுந்தரா விமையோர்
பாதியே வைத்த பரமனா ரளித்த பாலகா பவங் கெடுத் தாள
நாதியே முளைத்த வேரகச் சாமி நாதனே பரமசற் குருவே. (4)

கந்தனே கருணா மூர்த்தியே கார்த்தி கேயனே கடம்பனே யென்னச்
சிந்தனை செய்துன் றிருக்கழல் வணங்காச் சிறியனேற் கருளுநா ளுளதோ
விந்தமும் பணியச் செய்குறு முனிக்கும் விமலமெய்ஞ் ஞானம தருளா
நந்தனே யருண கிரிமகிழ் சாமி நாதனே பரமசற் குருவே. (5)

கீரனுக் கிடுக்க ணேர்ந்தவப் பொழுது கிரவுஞ்ச கிரிபிளந் திடுவான்
பேரருள் வடிவாம் வேல்விடுத் தருளிப் பிணிதவிர்த் தாண்டவெம்பெருமான்
றாரகப் பொருளை வேதனுக் குணர்த்து சண்முகா நின்னடி பரவு
நாரக மருள்வா வேரகச் சாமி நாதனே பரமசற் குருவே. (6)

உன்னியல் பாட வுயர்சிதம் பரனுங் கீரனு மோர்குறு முனியு
மன்னிய குமர குருபரன் றானும் வலியர்மற் றெளியனேன் றரமோ
வன்னையே கருணை யப்பனே நீயு மகமகிழ்ந் தாதரித் தருள்வாய்
நன்னிதி மலியு மேரகச் சாமி நாதனே பரமசற் குருவே. (7)

நித்தமுன் றாளிற் பனிமலர் சூடி நியமமா யருச்சனை புரியச்
சித்தமில் நாயேன் றனையக மகிழ்ந்து சிறிதுகண் பார்த்திலை யெனிலோ
பித்தனே னுய்யு நெறியிலை பிள்ளை பிழையினைப் பெற்றவர் பொறுப்பர்
நத்தனன் மருகா வத்தனே சாமி நாதனே பரமசற் குருவே, (8)

பொற்பணி பூணு மடந்தையர் காமப் பொறியிடைப் பட்டிடா துன்றன்
கற்பனை கடந்த பேரருள் விலாசக் கதியினை யடையுநா ளுளதோ
விற்பனர் பரவுஞ் சிற்பர வடிவே விமலமெய்ஞ் ஞானநன் முதலே
கற்பக மளிக்கு மேரகச் சாமி நாதனே பரமசற் குருவே. (9)

வண்டலாம் பொழிலார் காவிரி யாற்றின் வடகரை யோங்கிய மதில்சூ
ழெண்டிசை பரவுஞ் சாமிமா மலையென் றியம்புறு மேரகப் பதி[illegible] [யா
தொண்டனேற் கென்று மண்டு தீ வினையைத் துகள்படச் செய்துசே வடி
தண்டளிர் நீழ றந்தருள் சாமி நாதனே பரமசற் குருவே. (10)

(திருவேரக நாதன் றிருவடி வாழ்க.)

விளைநிலத்திட்ட பயிர் விருத்தியாதற்கு, எருவும், நீரும் அவசிய மாதல்போல எண்ணங்கள் விருத்தியடைதற்கு அறிவும், ஊக்க மும் அவசியமாகும். விலங்கினங்கள் அழிக்காதபடி பயிரைப் பாதுகாப்பதுபோல, மலைப்பும், கோழைத்தனமும் வந்து, கலந்து உன் எண்ணங்களை அநியாயமாய் அழிக்காதபடி பார்த்துக்கொள். கடலையடுத்த உப்பளங்களில் உப்புவிளைவிக்கிறார்கள். மலைப் பிரதே சங்களில் மிளகு பயிர்செய்கிறார்கள். அதுபோல எண்ணங்களைத் தகுதியறிந்து எண்ணி வெவ்வேறுபயன் தரத்தக்கனவாய்ச்செய்து கொள். ஒருதரம் எண்ணிய எண்ணத்தைத் திரும்பத் திரும்ப நினைப்புக்குக் கொண்டுவருவாயேயானால், அதுவே சுலபத்தில் பய னை யடைதற் குரிய வழியாம்.

செய்கையி னன்றி யெண்ணம் உயிராது. அழுத்தமான எண் ணமே செய்கையாகப் பரிணமிக்கிறது. காணக்கூடாத உன் எண்ணத்தைச் செய்கையால் வெளியாக்கு. எண்ணம் பலிக்க உரியவாறு பாடுபடு. உண்மையாக உழை. உரிய வழியை யறி ந்து அதற்கேற்ற வகையில் பிரயத்னப்படாத காரியம் உருவாவ தில்லை. அப்போது சரியான வழியில் முயற்சியாத குற்றம் உன் மேலேயே சார்த்தப்படும். அடுத்தடுத்து முயற்சிசெய். மேலும் மேலும் உற்சாகங்கொள். எதற்கும் பிறரை யெதிர்பாராமல், உன்னில் நீயே முயல்வதாகிய 'தன்முயற்சி' யுடையவனாக இரு. கருவியும், காலமு மறிந்து முயன்றால் உனக்கு ஆகாதகாரியமும் உண்டோ? "என்குடும்பத்தை யுயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வரு வேன், என்று கையை உதறிக்கொண்டு ஊக்கத்தோடு முயற்சியிற் செல்லும் ஒருவனுக்கு ஒத்தாசை செய்யும் பொருட்டு, நல்ல அதிர் ஷ்டமானது தன் மேல்வேஷ்டியை இடுப்பில் இறுக்கிக் கட்டிக்கொ ண்டு அவனில் முற்பட்டு நிற்கும்" "சிறிதும் சோம்பலில்லாமல் முயற்சிப்பவன் குடியிருக்கும் வீட்டிற்கு, இலட்சுமியானவள் தடங்கேட்டுக் கொண்டு வந்து சேருவாள்" என்று நாயனார் கூறு கிறார். முற்படு. உன்னைச் சுற்றிலும் சந்தோஷமும், புன்சிரிப் பும், உற்சாகமும், உண்மை நிலையுமாய்க் காண முற்படு.

"கால தாமதமும், மறதியும், சோம்பலும், தூங்கிவிழுதலும் ஆகிய இவை நான்கும், "கெடுதி" யென்ற தீவிற்குப்போக விரும்பு

வோர் ஏறும் கப்பல்களாகும்" என்பது திருக்குறள். சிறிதும் அஜாக்கிரதையாயிராதே. அதனால் எதிர்பார்த்த நன்மையை யிழப்பதல்லாமல் பேதைமைப் பட்டமும் அடைவாய். எதிர்பார்த்த நன்மையைத் தீமையாகப் பெற்றுக்கொள்வதும் அதனாலேதான். சில சமயத்தில் உனக்குத் தோல்வி நேரலாம், அதற்காக மனம் உடைந்து போகாதே. தோல்வியே வெற்றியின் தாயகம். நீயடைந்த ஒவ்வொரு தோல்வியும் உனக்கு ரோஷத்தை யுண்டுபண்ணிக் கடைசியில் பெரிய வெற்றியை யுனக்கே சூட்டுகிறது. ஆறுதரம் கூடுகட்டித் தவறிவிழுந்த ஒரு சிலந்திப் பூச்சி ஏழாந்தரம் தன் கூட்டைக் கட்டிமுடித்தது. அவ்வாறே ஆறுதரம் தோல்வியுற்று ஏங்கியிருந்த புரூஸ் என்னும் ஒரு அரசனும் அதைப்பார்த்த விசேஷத்தால் ஏழாந்தடவையில் தன் பகைவரை வென்று ஜயத்தை யடைந்தனன் என்ற கதை யுண்மையே யல்லவா? "உனக்குத துன்பம் வந்தவிடத்து அதைப்பார்த்து நீ ஓர் ஏளனச் சிரிப்புச் சிரி" என்று ஒருவர் கூறுகிறார்.

உன்கையே யுனக்கு உதவி. உன்னை நீயே திருத்திக்கொள்ளல் வேண்டும். இது பற்றியே "தமக்கு மருத்துவர் தாம்" எனவும்,

"தன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையிருந்து
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்"

எனவும் அநுபவ வாக்குக்கள் எழுந்துள்ளன.

உனக்கு வேண்டும் சாமான்கள் நிரம்பிய பண்டக சாலையின் திறவுகோல் உன் கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. உன் சாமர்த்தியம்போல், அதைத் திறந்து இம்மை மறுமைப் பயன்களை யடையலாம். இவ்வாறு நீயே உன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் விதமாய் அருளியிருக்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கு நீ எவ்வளவு நன்றி யறிதலுள்ளவனா யிருக்கவேண்டும்?

A. கந்தசாமிப்பிள்ளை,
தமிழ்ப்பண்டிதர்.

# * கல்வி

இவ்வுலகில் பெறுதற்கரிய மானிடப் பிறவி பெற்றவர்க்கு இன்றியமையாதனவாயுள்ள பொருள்கள் கல்வி, செல்வம், என்னு மிரண்டுமாம். இவ்விரண்டனுள், முந்திநின்ற கல்விப்பொருள் பிந்திநின்ற செல்வப்பொருளினுஞ் சிறப்புடையது. "கல்வி" என்பது "கற்கவேண்டிய நூல்களைக் கற்றல்" எனப்பொருள்படும். அந்நூல்கள், கருவிநூல், அறிவுநூல், என இருவகைப்படும். கருவிநூல்களாவன: நிகண்டு, திவாகரம் ஆகிய இலக்கியங்களும், நன்னூல், தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களும், கணிதம் சோதிடம் தருக்கம் முதலியனவுமாம். அறிவுநூல்களாவன: சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய பாதங்களை அனுசரித்து அவற்றின் பலன்களை அடைந்துய்யும் நெறிகளைக் கற்பிக்கும் வேதம், ஆகமம், புராணம், இதிகாசமாதிய ஆத்மார்த்த நூல்களாம்.

"அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லார்
உலகநூ லோதுவ தெல்லாங்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்—(நாலடியார்)

என்றபடி எவ்வளவு கருவிநூல் கற்பினும் அறிவுநூல் கல்லாதொழியின் பயனின்றாகும். ஆகவே, கருவிநூல்களிற் றேறியபின்னர் இதனைத்துணையாகக் கொண்டே அறிவுநூலும் வேண்டப்படும்.

கல்வியானது செல்வப் பொருளைப் போல தீ, நீர், கள்வர், முதலியவற்றாலும், அரசர் பங்காளிகள் முதலியோராலும் கவரத்தகாததும், இம்மையிலேயே பற்பல தருமங்களை நெறியறிந்து செய்வதற்கு ஹேதுவானதாயுமிருத்தலுடன், மறுமையிலும் உடனின்றுதவி, செல்வம் கொடுக்கக் கொடுக்கக் குறைவதுபோற் குறையாதும், வளர்ந்துகொண்டும் வந்து நமதருந் துன்பங்களையெல்லாம் நீக்கவல்லதோர் நன்மருந் தாகும்.

---

* இது 1912ஞு அக்டோபர்மீ 20உ அரித்துவாரமங்கலம் ஸ்ரீமாந். வா. கோபாலசுவாமி ரகுநாதராஜாளியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடந்த, "தஞ்சைத் தமிழ்ச்சங்கத்தின்" பதினோராவது ஆண்டு மகோற்சவத்தன்று வாசிக்கப்பெற்ற வியாசம்.

இனிக் கல்வியை, இளமையிலேயே ஒழுக்கம், வாய்மை, நற்குடிப்பிறப்பு, தூய்மை, அழுக்காறின்மை, அவாவின்மை, சாந்தம், அறிவு முதலிய எண் குணங்களும் நிரம்பிய நல்லாசிரியன் மாட்டுச் சென்று அவர் "இருமென இருந்து,சொல் எனச்சொல்லி" அவர் மனமகிழ நடந்து கற்கவேண்டும். கற்றபின் அவ்வாசிரியனிடத்து விடைபெற்று இல்லஞ்சென்று சாவகாசம் நேர்ந்துழிச் சிந்திக்கவேண்டும். அவ்வண்ணஞ் சிந்தியாதுவிடின் கற்ற கல்வி பயன்படாததாகும்.

கல்விக்கு முக்கியமான கருவி, ஆசிரியர் நம்மீ தன்புடையராகுமாறு அவர்களிடத்து மரியாதை, அன்பு முதலியவைகளை யுடைத்தாயிருத்தலோடு அவர்களுக்கு உற்றிடத்துதவியும் புரிதலே.

ஆசிரியர் சொல்வதைச் சாவதானமாகக் கேட்டுணர்ந்தாலும், எவ்வளவு கூர்மையானபுத்தி யுடையவர்களாயிருப்பினும் மாணவர்கள் காற்பங்கே தம்மனத்திற் பதித்துக் கொண்டவர்களாவார். இதன் பிற்பாடு, ஒரு சாலை மாணுக்கருடன் பயின்று வருதலாற் பின்னுமொருபங்கு பெறுவார்கள். கற்றவைகளிற் சந்தேகம் முதலியவைகள் கேட்டார்க்கு விடையளிப்பதால காற்பங்கும், பிறர்க்குச் சொல்லிக் கொடுப்பதைக் கொண்டு மீந்த காற்பங்கும் அடைவார்கள். ஆதலினல் கற்றவைகளைத் தம் அகத்தே வைத்திருந்து பிரயோஜனமின்றிப் போகாது, பிறர்கருப் பயனுறுமாறு, கற்பிக்கவேண்டும். வித்தியாதானமே எல்லா தானங்களிலும் முதற்றனத் தமைந்து கிடப்பதாகும்.

"இளமையிற் கல்" என்ற மூதாட்டியார் வாக்கின்படி இளம் பிராயத்திற் கற்கவேண்டும். ஸம்ஸாரபந்தம், நோய், மூப்பு முதலியவைகளால் அவத்தையுறும் விருத்த திசையி லெவ்வளவு கற்றாலும் மனதிற் பதியாது. கற்றவர் வாசனையுடைய நறுமலருக்குச் சமானமானவர்கள். கல்லாதார் முருக்கம் பூவிற்குச் சமானமானவர்.

கற்றோரையும் கல்லாரையும் ஒன்று படுத்திச் சீர்தூக்குங்கால்,கல்லாதார் குருடர் போலும மிருகங்கள்போலு மிருக்கின்றார்களென்பது தோன்ற

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" எனவும்
"விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்" எனவும்

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளி யுள்ளார்.

இனனும் இரு நிதிக்கிழவனென்னும் குபேரனனைய ஐசுவரிய முடைய அரசர்களாயினும் அவர்களுக்கு அவர் நாட்டிலன்றி ஏனைய நாடுகளிற் சிறப்பில்லை. கற்றறிந்த புலவர்களுக்கோ சென்ற சென்ற இடங்களிலெல்லாஞ் சிறப்பு உண்டு. இதற்கு கம்பநாட்டாரையே சாட்சி யாகக் குறிக்கலாம். இது கொண்டே

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

என்றருளியுள்ளார் தேவர்.

ஆதலின், கல்வி செல்வத்தினும் மேம்பட்டதாகலின், விரைவினிற் கற்கவேண்டும். சிலர் கல்வி சிறிது கற்ற மாத்திரத்திலே கர்வங்கொண்டு தாம் சகல கலா பண்டிதரென மதித்து கற்குந் தொழிலை அறவே விட்டு விடுகின்றனர். இவர்கள்

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தற்குக்
கற்றனைத் தூறு மறிவு"

என்ற பொது மறையை அறியார் போலும். இன்னும் சிலர் கற்ற கல்வியைப் போற்றாது, மேலும மேலும், கற்பதிலேயே கவலையுடையவராய் இருக்கக் காண்கிறோம். இவரெண்ணம் முற்றிலும் பொருத்தமன்று, கையிலுள்ள நலல கனியை வலிய இழந்துவிட்டு மரத்தின்கண் உள்ளதாய பழத்தைத் தறடு கொண்டு பறித்துக் கொள்பவர்க்கும், தமமிடத்துள்ள திரவியத்தைத் தகுந்தபடி காவாது கைநெகிழ விட்டு பிறகு அரிப்பரித்துப் பொருள் சம்பாதிப்பவர்க்கும் இவர்களுக்கும் வித்தியாசமில்லை.

"பிச்சை புகினும் கற்கை நன்றே" என்ற வாக்கை நோக்குமிடத்து ஒருவருக்கு வறுமை வந்த காலத்தும் கற்றல் வேண்டு

மென்பது புலப்படும். இதனால் அன்றோ பொய்யா மொழியும், "என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு" என்றருளியது?

கல்வியானது மற்றையவற்றி னெல்லாம் மேம்பட பற்பல காரணங்களிருப்பினும், முதன்மையாக ஆராயுங்கால்

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்கு
எழுமையு மேமாப் புடைத்து"

என்றபடி இம்மையின் மட்டும் பயனுதவி இவ்வுடம்பழியத் தானு மழியாது, சன்ம சன்மங்களினும் வந்துதவுகின்ற வுயிர்த்துணையு மாகுதலே காரண மென்க.

பின்னர் கல்வியின் பெருமையும் கல்வியாலெய்தும் பயனையும் அளவிட்டுக் கூறுதல் யார்க்கும் அருமையே எனினும், அது பல தர்மங்களை நெறியறிந்து செய்வான் எப்பிறப்பினும் உதவி புரிந்து, தர்மார்த்த காம மோக்ஷ மென்னும் நான்கு புருஷார்த்தங்களையும் தர வல்ல தென்பதை

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வி யினூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை." என்பதனாலறிக.

கல்வியே மக்கட்கு இன்றியமையாத பொருள் என்றும் அவைகளின் பாகுபாடுக ளின்னின்னவை என்றும், நல்லாசிரியனை யடைந்து அவைகளைக் கற்கும் முறைக ளின்னின்னவை என்றும், அப்படி கற்பதும் இளமையிலே கற்க வேண்டு மென்றும், கற்ற பிறகு பிறர் பயனுறுமாறு வித்தியா தானம் செய்தல் வேண்டும் என்றும், கற்றோர்க்கும் கல்லார்க்கும் உள்ள பேதம் இன்னின்னவை என்றும் கல்வியினாலேயே மோக்ஷாதி சாதனங்களை அடையலாம் என்றும், இதுகாறும் கூறியவற்றால் இனிது விளங்கும்.

இனி இது விஷயமாய்ச்சொல்ல வேண்டியது "வித்தியாபாநுவின் மேலட்டை முகப்பிற் காணப்படும் அருமைக் குறள் வெண்பாவாகிய

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" என்பதே.

**N.** திருவேங்கடம்,
ஸ்ரீ கோபாலசாமி கலாசாலை மாணவன், ஹரித்வாரமங்கலம்.

# * திருநீற்றின் பெருமை.

பழநியப்பன்:—

" தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர்செந்நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

சாத்தப்பன்:—நண்ப! என்னவோ சொல்லிக்கொண் டிருக்கிறாயே அதென்ன?

பழநியப்பன்:—நான் சொல்லியது உபாத்தியாயர் எனக்குச் சொல்லிக்கொடுத்திருக்கிற தோத்திரப் பாக்களுள் ஒன்று. அது குமர குரு பர சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய ஸகலகலாவல்லிமாலைச் செய்யுள். அதனைச் சொல்லிக் கலைமகளைத் தோத்திரம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். என் நெற்றியில் ஒன்றும் காணேன்? நீறில்லா நெற்றிபாழ், என்பது சரியாய் இருக்கிறதே.

சாத்தப்பன்:—அஃது இருக்கட்டும். நேற்று நான் விகடத்திரட்டு என்னும் நூலைப்படித்தேன். அதில் "திருநீறிட்டார் கெட்டார், திருநீறிடாதார் வாழ்ந்தார்" என்று சொல்லியிருந்தது. ஆதலால் இனித் திருநீறு இடக்கூடாதென்று நினைத்தேன். உன் அபிப்பிராயம் என்ன?

பழநியப்பன்:—நண்ப! உபாத்தியாயருடைய உதவியின்றித் தானே கண்ட புத்தகங்களைப் படிப்பதன் பயன் இது, நீ படித்ததோ விகடத்திரட்டு, அதன் பெயரினாலேயே அதிலுள்ளவை வேடிக்கையா யிருக்குமென்று தெரிகிறது. நீ சொல்லியவாக்கியம் சிலேடைப் பொருளோடு கூடியது. நீ கொண்டது உண்மைப் பொருளன்று. அதன் உண்மைப் பொருள் வேறு இருக்கிறது. ஆதலால் இனி நீயாக எதையும் படித்து விபரீதப் பொருள் செய்யாதே.

சாத்தப்பன்:—அப்படியானால் அதன் உண்மைப் பொருள் என்ன? அது உனக்குத்தெரியுமானால் தயவுசெய்து எனக்குச் சொல்லவேண்டும்.

பழநியப்பன்:—நண்ப! நீ சொன்னவாக்கியத்தின் பொருளை உபாத்தியாயர் ஒருதரம் எனக்குச் சொல்லி யிருக்கிறார் "திருநீறிட்டார் கெட்டார் திருநீறிடாதார் வாழ்ந்தார்" என்பதை "திருநீறிட்டு ஆர்கெட்டார்; திருநீறிடாது ஆர்வாழ்ந்தார்" என்றுபிரித்துப் பொருள் கொள்ளவேண்டும். அவ்வாறு கொள்ளின், திருநீறிட்டுக் கெட்டவர்களும் இல்லை, திருநீறிடாது வாழ்ந்தவர்களும் இல்லை என்பது அதன் கருத்தாம்.

---

* இது கோனாபட்டு "ஞானசம்பந்த நற்சபையின் (14-9-12.) கூட்டத்தில் புதுக்கோட்டை ஸ்டேட் ஸ்கூல் ஸூப்ரின்டெண்டு ஸ்ரீமது R. ஸ்ரீநிவாஸஐயங்காரவர்கள் B A, அக்ராஸனத்தின் கீழ் நடந்தவிழாவிடை.

சாத்:—நண்ப! அதன் பொருள் நன்றாயிருக்கிறது. அதனால்தான் பெரியோர்கள் அதனைப் பூசுகிறார்களோ? இருக்கட்டும், திருநீறென்பது பசுவின் சாணத்தைச் சுட்டசாம்பல்தானே? அதற்கு அத்தனை மகிமை என்ன?

பழ:—உலகத்திலுள்ள பிராணிகளி லெல்லாம் உயர்ந்தது பசு, அது நமக்கு இன்றியமையாத பால் தயிர் நெய் முதலிய பல பொருள்களையுங் கொடுத்து, நம்மைப் போஷிக்கின்றது, அது தெய்வத் தன்மையுடையது, அதன் சரீரத்தில் மயிர்க்கால்கள் தோறும் தேவர்கள் வசிக்கிறார்கள். அதன் ஆண் சிவபிரானுக்கே வாகனமாயிருக்கின்றது. பசு இவ்வளவு மகிமையுடையதாதலால் அதன் சாணத்தினாலாகிய நீறுநீறும் மகிமையுடையதாம்.

சாத்:—நண்ப! உன்வார்த்தை விந்தையாயிருக்கின்றது, பசு சிறந்த பிராணியாயின அதன் மலமாகிய சாணமுஞ் சிறந்ததாகுமோ?

பழ:—ஆம் அதுவுஞ் சிறந்ததே. அது எல்லா அசுத்தங்களையும் போக்கும், எச்சிற்பட்ட இடத்தைப் பசுவின்சாணத்தினாலே சுத்திசெய்கிறார்கள்; வீட்டை அதனால் மெழுகிச் சுத்திசெய்கிறார்கள்; தினந்தோறும் அதிகாலையில் சாணத்தை நீருடன்கரைத்து வாசலிற் றெளிக்கிறார்கள்; இன்னும் அச்சாணம், கோசலம் பால் தயிர் நெய் ஆகிய இவற்றுடன் கூடிப் பஞ்சகவ்வியமாகி ஆத்ம சுத்திக்காகவும் உட்கொள்ளப்படுகிறது. இவ்வாறு இதன் பெருமை அனந்த மென்று நினை.

சாத்:—அப்படியா! யோசிக்கு மிடத்து நீ சொல்லியவை யெல்லாஞ் சரியாயிருக்கின்றன. அந்தச்சாணத்தை யெடுத்துச் சுட்டுவைத்துக்கொள்வது திருநீறு. இவ்வளவு தானே?

பழ:—நண்ப! சாணத்தைச் சுட்டெடுப்பது திருநீறென்று சுருக்கமாகச் சொல்லிவிட்டாய். அது செயவது அவ்வளவு சுலபமானதன்று.

சாத்:—அப்படியா! அது செய்வது வருத்தமோ? ஆனால் அது எப்படிச்செய்கிறதென்பதை எனக்குச் சொல்லவேண்டும். சற்று நேர மாயினுங் குற்றமில்லை.

பழ:—திருநீற்றில் இரண்டு மூன்று வகையுண்டென்றும், செய்யும் பொழுது ஆசாரமாயிருக்கவேண்டுமென்றும், செய்வதற்கு மந்திரங்களை மூலாம் உண்டென்றும், பெரியோர்கள் சொல்லுகின்றனர். அவையெல்லாம் நான் அறியேன். சுருக்கமாக எனக்கொன்றுதெரியும்.

சாத்:—உனக்குத் தெரிந்ததைச் சொல்.

பழ:—பிண்ணாக்கு மல முதலிய அசுத்த வஸ்துக்களைத் தின்னாது, புல்லைமாத்திரம் மேய்ந்து செழித்திருக்கின்ற கறவைப் பசுவின் சாணத்தைப் பூமியில் விழுவதற்குமுன் தாமரையிலையில் அதிகாலையில்

வந்தியெடுத்துப் பஞ்சகவ்வியம் விட்டுப்பிசைந்து உருட்டி வெய்யிலில் வைத்து உலர்த்திச் சாயங்காலம் சுத்தமான பதர்க்குள் வைத்து மூடித் தீயிட்டால் அசசாணம் வெந்து நீறுகும். மறுநாள் ஆசாரத்துடன் அதனை யெடுத்துச் சுத்தமான வெள்ளைவஸ்திரத்தினல் வடிகட்டிப் புதுப்பானையில் வைத்துக்கொள்ள வேண்டும். பின் அப்பானையிலிருந்து எடுக்கும் பொழுதெல்லாம் ஆசாரத்துடன் எடுத்துப் பட்டுப் பையிலேனும் சம்புடத்திலேனும் வைத்துக் கொண்டு பூசவேண்டும்.

சாத்:—நல்லது, நீ விஷயங்களை நன்கு அறிந்திருக்கிறாய் ஆதலால் இந்த விபூதியை எப்படிப் பூசிக்கொள்ளுகிறது; பூசிக்கொண்டால் அது தரும் பயன் என்னை? என்பவற்றையும் எனக்குச் சொல்லல் வேண்டும்.

பழ:—அது பூசும் விதம் உத்தூளனம் திரிபுண்டரம் என இரண்டுவகைப்படுமென்றும் அதன் பிரயோசனம் அனந்தமென்றும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன், அவை பலநூல்களினும் கூறப்பட்டிருக்கின்றனவாம். நான் படித்துள்ள குமரேசசதகத்தில் இவ்விஷயம் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

சாத்:— குமரேச சதகத்திலா? அது நானும் அந்தப் பள்ளிக்கூடத்திற் படித்திருக்கிறேன். எனக்கு நூறுபாட்டும் பாராமல் தெரியும். அதிலில்லையே?

பழ:—உனக்கு நூறுபாட்டுந் தெரியுமா?

சாத்:—தெரியும். எதைவேண்டுமானாலுங் கேள்.

பழ:—சரி, "பத்தியோடு சிவசிவா." என்னும் பாட்டைச்சொல்.

சாத்:—

"பத்தியோடு சிவசிவா வென்றுதிரு நீற்றைப் பரிந்துகை யாலெடுத்துப்
பாரினில் விழாதபடி யண்ணாந்து செவியொடு பருத்தபுய மீதிலொழுக
நித்தமூ விரல்களால் நெற்றியி லழுந்தவுற நினைவாய்த் தரிப்பவர்க்கு
நீடுவினை யணுகாது தேகபரி சுத்தமாம் நீங்காம லிமலனங்கே
சத்தியொடு நித்தம்விளை யாடுவன் முகத்திலே தாண்டவஞ் செய்யுந்திரு
சஞ்சலம்வ ராதுபர கதியுதவு மிவரையே சத்தியுஞ் சிவனென்னலாம்
மத்தினிய மேருவென வைத்தமுதி னைக்கடையு மான்மருக னாமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே."

பழ:—இசை நன்றாயிருக்கிறது. இதன் பொருள் உனக்குத் தெரியுமோ?

சாத்:—எனக்குத் தெரியாது. நான் மூன் உரையுடன் படிக்கவில்லை. உனக்குத் தெரிந்திருந்தால் அக்கவியின் பொருளைச் சொல்லுவாயாக.

பழ:—நான் கற்பக விநாயக கலாசாலையில் இதனைப் பொருளுடன் படித்திருப்பதால் சொல்லுகிறேன் கேள். "பத்தியோடு..........நினைவாய்த் தரிப்பவர்க்கு (1) தீவினை அணுகாது (2) தேகம் பரிசுத்தம் ஆம். (3) நீங்காமல் நிமலன் அங்கே சத்தியொடு நித்தம் விளையாடுவன். (4) திரு முகத்திலே தாண்டவஞ் செய்யும். (5) சஞ்சலம் வராது. (6) பரகதி உதவும். (7) இவரையே சத்தியஞ் சிவனென்னலாம். மத்து இனிய ........குமரேசனே" என்பது இக்கவியின் அன்வயம். இதன் கருத்து: திருநீற்றை விரும்பிச் சிந்தாமல் எடுத்து நெற்றியிற் பூசிக் கொள்பவர்க்குத் தீவினை அணுகாது, தேகம் பரிசுத்தமாம், அவன் இருக்கும் இடத்திலே சிவபிரான் உமாதேவியாரோடும் விளங்குவர். இலட்சுமி விலாசமுண்டாகும், துக்கம் வராது, (இவ்வளவும் இகத்திற் பிரயோசனம். இது மட்டுமோ) பரகதியும் உதவும் ஆதலால் இவரைச் சிவனென்றே சொல்லலாம் என்பதாம்.

சாத்:—இக்கவியில் "நித்தம் மூவிரல்களால் நெற்றியில் அழுந்தவுற நினைவாய்த் தரிப்பவர்க்கு" என்று நெற்றியை மாத்திரம் சொன்னதென்ன? மற்ற அவயவங்களில் பூசவேண்டுவ தில்லையோ?

பழ:—நாம் வசிப்பதற்குரிய வீட்டின் முகப்பிலே அதிகாலையிற் சாணந்தெளிப்பதனால் வீட்டிற்கு வரக்கூடிய தீமையெல்லாம் நீங்குகின்றன; அங்ஙனமே நமது ஆன்மா வசிக்கும் வீடாகிய சரீரத்திற்கு முகப்புப்போன்ற நெற்றியிலே சுட்ட சாணமாகிய திருநீற்றைப் பூசுவதனால் சரீரத்திற்கு வரக்கூடிய தீமையெல்லாம் நீங்குகின்றன. அவசியமான பொழுது வீட்டினுள்ளேயும் சாணியிட்டு மெழுகுவது போல நம் சரீரத்தின் மற்றைப் பாகங்களிலும் திருநீறு பூசவேண்டும்.

சாத்:—நண்ப! உபமானம் அழகாயிருக்கிறது. ஆனால் ஒரு சந்தேகம். திருநீறு பூசுவதனால் சரீரத்திற்கு வரக்கூடிய தீமையெல்லாம் நீங்குகின்றன என்றாய். இதுவரையில் யாருக்கேனும் விபூதி பூசினதினாலே தீமைகள் நீங்கியிருக்கின்றனவா?

பழ:—அதற்கென்ன சந்தேகம். நீங்கியிருக்கின்றன, நீங்குகின்றன, நீங்கும்; இவற்றிற்கு பல உதாரணங்கள் உள. சுருக்கமாக இரண்டொன்று சொல்லுகிறேன் கேள். மதுரையை அரசாண்ட கூன் பாண்டியனுக்கு ஒரு சமயத்தில் வெப்பு நோய் உண்டாயிற்று. அப்பொழுது திருஞானசம்பந்த சுவாமிகள் அங்கெழுந்தருளி "மந்திரமாவது நீறு" என்றெடுத்துத் திருப்பதிகம் பாடி அவ்வரசனுடலில் திருநீற்றைப் பூசினமாத்திரத்தில் அவனது நோய் முற்றும் நீங்கி விட்டது.

சாத்:—ஓகோ "மந்திரமாவது நீறு என்பது அதற்காகப் பாடினது தானோ? அப்பதிகம் எனக்குத் தெரியுமே. நான் சொல்லுகிறேன் கேள்.

"மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்து ளுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் றிருநீறே."

பழ:—நண்பா! எல்லாவற்றையும்கேட்க இப்பொழுது நேரமில்லை. இப் பதிகத்தின் ஈற்றுப் பாசுரமாகிய ஆற்ற லடல்விடை யேறும் என்பதைச் சொல்.

சாத்:—"ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
றேற்றித் தென்னனுட லுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே".

பழ:—இதில் "ஆற்றல் அடல் விடை யேறும் ஆலவாயான் திரு நீற்றை" என்றதனால் திருநீறு சிவபிரானுக்கு உரியதென்பதும், "போற் றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன், தேற்றித் தென்னனுட லுற்ற தீப்பிணியாயின தீரச் சாற்றிய பாடல்கள் பத்தும்" என்றதனால் புகலியென் னுஞ் சீகாழியிலுதித்த அந்தணராகிய ஞானசம்பந்தப் பெருமான் அவ் விபூதியைத் துதி செய்து பாண்டியன் பிணிதீருவதற்காகப் பாடியது இப் பதிகம் என்பதும பெறப்பட்டனவல்லவா?

சாத்:—ஆம். ஆனால் இது பழைய கதை யல்லவா?

பழ:—சிவ, சிவ, இனி அப்படிச் சொல்லாதே; இது கதை அன்று; உண்மையாக நடந்த சரித்திரம். அஃதிருக்கட்டும். இப்பொழுதும் குழ ந்தைகளுக்கு விபூதி போட்டால் அரிட்டங்கள் நீங்குகின்றன. சுகா குணத்தைப் போக்குகிறது. மேலும் இப்பொழுது வெள்ளைக்காரர்களும் இதன் பெருமையை அறிந்து வருகிறார்கள். அமெரிக்காவிலுள்ள ஒரு டாக்டர் நம் திருநீற்றின் மகிமையை அறிந்து அதனை முறைப்படி செய்து வைத்துக் கொண்டு மனிதருக்குண்டாகக் கூடிய வியாதிகளை யெல்லாம் போக்குகின்றனராம். ஆதலால் இனி நீயும் திருநீற்றை அன்புடன் பூசிப் பயன் பெறுவாயாக.

சாத்:—நண்ப! உன்னால் இன்று நான் பல விஷயங்கள் தெரிந்து கொண்டேன். இனி நான் திருநீற்றை ஒரு நாளும் விடமாட்டேன். இப்படி எனக்கு அறிவுறுத்தினதற்காக உனக்கு வந்தனம் புரிகின்றேன், நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

சம்பந்தன்.

# சமாசாரம்.

## கே. வி. கோவிந்தசாமி அன் கோ.

### சோதிட வைத்தியசாலை, மதுரை.

---

இப்பெயர்கொண்ட வைத்திய சாலையின் "காட்டலாக்" ஒன்று கிடைக்கப்பெற்றேம். இக்கம்பெனியாரின் மருந்துகள் சிலவற்றை, நாமும் எம் சிநேகிதர் பலரும் அநுபவத்தில் அறிந்திருக்கிறோம். யாம் அறிந்தவளவில், இவர்கள் சுதேசவைத்தியத்திலே மிகத்திறமை பெற்றவர்கள் என்பது மட்டுமன்றி, நம் வைத்திய முறைக்கே ஒரு புதுப்பெருமையை யுண்டாக்கக் கூடியவர்கள் என்பதிலும் ஐயமில்லை. நம்மவரில், கண்டவரெல்லாம் கையாடிச் சீர்கெட்டுக்கிடக்கும் நாட்டுவைத்திய முறை என்று சீர்திருந்துமோ என்று அறிஞர் கவல்கின்ற இக்காலத்து இவர்கள் மருந்துகள் பெரிய ஆறுதல் அளிக்கவல்லன என்றே கருதுகின்றோம். பத்திரிகைகளில் மருந்து சம்பந்தமான விளம்பரங்களே அதிகமாக வெளிப்படுகின்றனவாயினும், அநுபவத்தில் நன்மைகள் அளிக்கக்கூடியன சிலவே என்பதைப் பலரும் அறிவர். இவ்விளம்பரங்களிற்கண்டவைபோல, இக்கம்பெனி மருந்துகளை நம்மவர் கருதல் தகாதென்பதையும், ஆடம்பரங்களைச் செய்ய அறியாத இவர்கள் முறைகளை ஒவ்வொருவரும் அநுபவித்து உணருதல் ஆவசியகம் என்பதையும், நாம் நம நாட்டாருககு அதிகமாகவே வற்புறுத்த விரும்புகிறோம். உண்மையைக்கண்டறிந்தால், அதனைப் பலருமறிய வெளிப்படுத்திப் பயன் விளைப்பதினும், பத்திரிகைகள் நம் நாட்டுக்குச் செய்யககூடிய உத்தம கைங்கரியம் வேறுமுண்டோ? தேகநிலையைப் போற்றுவதில் குறைவுடையரான நம் நாட்டார், இத்தகைய மருந்துகளால் சீர்பெற்றுத் திடமபெற வேண்டுமென்பதே நம் கருத்தாதலால், மேலே எழுதியவற்றை, ஏனைய போலிவிளமபரம் போலக் கருதாது ஒவ்வொருவரும் அநுபவித்துப் பெறுதற்கரிய மானிடயாக்கை பெற்றதனால் ஆயபயனகளைப் பெறவேண்டுமென்று திருவருளைச் சிந்திககின்றோம். இவர்கள், வைத்தியமுறையோடு, சோதிடமும், ஆரூடமும் உரைக்க வல்லவர்களாகவும் இருப்பது நம்மவர் அறிந்து மகிழத்தக்கது. "ஸர்வே ஜநாஸ் ஸுகிநோபவந்து" இக்கம்பெனியாரின் காட்டலாக்குகளையும் மருந்துகளையும் பெற விருமபுவோர் "கே. வி. கோவிந்தசாமி அன் கோ, ஜோசியம், வைத்தியம, மேலச்சித்திரைவீதி, வளையற்காரச்சந்து, மதுரை" என்ற விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக் கொள்வார்களாக.

பத்திராதிபர்.

உ

சிவமயம்.

குமரன்றுணை.

# Catalogue of
# Astrology & Medicines:

## கே. வி.
# கோவிந்தசாமி அன் கோ.,
## ஜோதிட வைத்தியம்,

கம்பெனி ஸ்டாக்கில் விற்பனைக்குத் தயாராயிருக்கிற மருந்துகள்.

45 நாள் சாப்பிடக்கூடியது.

| | | | | |
|---|---|---|---|---|
| தாதுவிர்த்திக்கு | 1. பேரிச்சங் காய்கிருதம். | 2 | 8 | 0 |
| | 2. வித்தாதிக் குளிகை. | 2 | 8 | 0 |
| | 3. மதயானைக் குளிகை. | 2 | 8 | 0 |
| | 4. பேதனுவிரை அல்வா | 2 | 8 | 0 |
| | 5. ஆலம் பால்குளிகை. | 2 | 8 | 0 |
| | 6 மணிவிந்தாதி லேகியம். | 4 | 8 | 0 |
| கெர்ப்பஉற்பத்திக்கு சந்தான கருணியென்னும் மூலிகை | | | | |
| | உப்பு. 11நாள் சாப்பிடக்கூடியது. | 1 | 0 | 0 |
| | 33நாள் சாப்பிடக்கூடியது. | 3 | 0 | 0 |
| வெள்ளை வெட்டைமேகம்வகையரு,வுக்கு. சல்லியகருணி | | | | |
| | யெனனும் சததுச்செந்தூரம். | | | |
| | 11நாள் சாப்பிடக்கூடியது. | 1 | 0 | 0 |
| | ஷை 22நாள் சாப்பிடக்கூடியது. | 2 | 0 | 0 |
| சகலவிதமானவாய்வுகளுக்கும் | | | | |
| | உலாந்தாலிங்கசெந்தூரம் ஒருவிராகனிடை | 7 | 0 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பித்த சோகைக்கு | கரிப்பான் லேகியம் | 11நாளைக்குரியது | 1 | 0 | 0 |
| ஷைக்கு | அயசெந்தூரம் | ஷை | 2 | 8 | 0 |
| மூலகிராணிக்கு | சூரணம் | ஷை | 1 | 0 | 0 |
| | | 22நாளைக்கு ஷை | 2 | 0 | 0 |
| | | 45நாளைக்கு ஷை | 4 | 0 | 0 |
| சயரோகம் | சூரணம் | ஷை வகைப்படி | 1<br>2<br>5 | 4<br>8<br>0 | 0<br>0<br>0 |
| தலைவலிக்கு | ஷை | 1அவுன்ஸ் டப்பி | 0 | 6 | 0 |
| நீரிழிவுக்கு | ஷை | 11 நாளைக்கு<br>22 நாள் ஷை<br>45 நாள் ஷை | 2<br>5<br>10 | 8<br>0<br>0 | 0<br>0<br>0 |
| குன்மம் | ஷை | 11 நாள் ஷை | 2 | 0 | 0 |
| மஞ்சக்காமாலை | ஷை | ஷை | 1 | 0 | 0 |
| நரைமயிர்கருமையாக | பௌடர் | 1அவுன்ஸ்பாட்டல் | 0 | 6 | 0 |
| பல்துலக்கும் | பௌடர் | 1 டப்பா | 0 | 4 | 0 |
| ஸ்நானப் | பௌடர் | 1 டப்பா | 0 | 4 | 0 |
| அன்னதுவேஷம்அரோசிகம் | புளிப்புமாதுளை அறுசுவைலேகியம் | 11 நாள்லேகியம் | 1 | 4 | 0 |
| வரட்சிநீங்க | பருத்திவிரை அல்வா | 1 சேர் | 3 | 0 | 0 |
| வாந்திபேதிக்கு | மெழுகு | 1 தோலா | 1 | 0 | 0 |
| சகலவிஷநிவாரணி | மை | 1 டப்பா | 1 | 0 | 0 |
| ரிணமேகம் | களிம்பு | 1 தோலா | 0 | 8 | 0 |
| பசித்திவரம் | பாவனமிளகு | 1 டப்பா | 0 | 6 | 0 |
| காலக்கிரமவிரோசனி | மாத்திரை | 48 மாத்திரை | 0 | 12 | 0 |
| நேத்திரரோக | மாத்திரை | 1 டசன் | 0 | 12 | 0 |
| அண்டபார்சவாய்வுக்கு | மாத்திரை | 1 டசன் | 1 | 8 | 0 |
| பாலர் களுக்கு | உறைமிளகு ஷை | 50 மாத்திரை | 0 | 8 | 0 |
| தாகவிடாய்க்கு | மாத்திரை | 48 மாத்திரை | 0 | 8 | 0 |
| பாலர்கள் | விரோசனமாத்திரை | 2 டசன்மாத்திரை | 0 | 8 | 0 |
| கணைமாந்தம் | மாத்திரை | 2 டசன்மாத்திரை | 1 | 0 | 0 |
| காக்கைவலிப்பு | அயமாத்திரை | 11 நாள்சாப்பிட | 1 | 0 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வயற்றளைவுமூல கிராணி | கபாடமாத்திரை | 5 நாள் சாப்பிட | 1 | 0 | 0 |
| சூலை | குளிகை | 9 குளிகை | 1 | 8 | 0 |
| மேகஊரல் | குளிகை | 22 நாள்சாப்பிட | 2 | 8 | 0 |
| இராஜசுரம் | குளிகை | 7 குளிகை | 1 | 0 | 0 |
| சொரிசிரங்கு | எண்ணை | 1 அவுன்ஸ்பாட்டல் | 0 | 8 | 0 |
| கர்னரோகம் | எண்ணை | 1 அவுன்ஸ்பாட்டல் | 0 | 8 | 0 |
| தேகம்முகம்இவைகளில்விழும்கருப்புக்கு | எண்ணை | 1 அவுன்ஸ்பாட்டல் | 0 | 4 | 0 |
| கர்னரோகம் | ஸ்நானத்தைலம் | 5 முறைக்கு | 1 | 8 | 0 |
| நேத்திரரோகம் | ஸ்நானத்தைலம் | 5 முறைக்கு | 1 | 8 | 0 |
| தலைவலிக்கு | ஸ்நானத்தைலம் | 5 முறைக்கு | 1 | 8 | 0 |
| கை, கால், எரிவு முதலியஉஷ்ணத்திற்கு | குளிதாமரைத்தைலம் | 5 முறைக்கு | 1 | 4 | 0 |
| சர்வ தேள் விஷம் | தைலம் | $\frac{1}{4}$ அவுன்ஸ்பாட்டல் | 0 | 8 | 0 |
| பித்தவிரிவுக்கு | தைலம் | $\frac{1}{4}$ அவுன்ஸ்பாட்டல் | 0 | 4 | 0 |
| கற்றாளைநாற்றம்போக்க | வில்லை | 11 நாள்வில்லை | 0 | 4 | 0 |
| தேமலுக்கு | வில்லை | 7 வில்லை | 0 | 8 | 0 |
| தேக ஆரோக்கியம் | தாமரைப்பூஷர்பத் | பெரியபாட்டல் | 1 | 8 | 0 |
| படர்மேகசங்காரி | வெண்ணை | 1 தோலாடப்பி | 0 | 8 | 0 |
| சயரோகத்துக்கு | செம்முள்ளித்தைலம் | பெரியபாட்டல் | 2 | 8 | 0 |
| இரத்தவிர்த்திக்கு | கெந்தாப்பிரோஜாத்தைலம் | கால்அவுன்ஸ் பாட்டல் 1க்கு | 5 | 0 | 0 |
| தேககாந்திக்கு | மனோரஞ்சிதத்தைலம் | 45 நாளைக்கு | 2 | 8 | 0 |
| மருந்து ஈடு. வெளியேற | குளிகை | 1 குளிகை | 0 | 8 | 0 |
| எரிகும்பவாய்வு ஈரல்வலி | குளிகை | 5 வேளைக்குரியது | 1 | 8 | 0 |
| நரம்புச்சிலந்தி | நவநீதமெழுகு | 3 வேளைக்குரியது | 0 | 12 | 0 |
| எண்ணைஸ்நான | வில்லை. | 1. வேளைக்குரியது | 0 | 0 | 6 |
| உருப்பிமூலம் | சூரணம் | 11. நாளைக்குரியது | 1 | 0 | 0 |

## முக்கிய அறிவிப்பு.

### அன்பு மிகுந்த நண்பர்களுக்கு விக்ஞாபனம்.

இதைப் பூர்த்தியாக வாசித்துத் தங்கள் தங்கள் பந்துமித்திர ஜனங்களுக்குந் தெரிவிக்கும்படி வந்தனத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஸ்ரீ அகண்டபரிபூரண சச்சுதானந்த பரப்பிர்ம்ம சொரூபமாய் விளங்கானின்ற சாக்ஷாத் கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்ட எண்ணிறந்த கோடி ஜீவாத்மாக்களில் மானிடதேகம் பெறுவதே மிகவும் அருமையென நூல்களெல்லாம் ஓலமிட்டிருக்கின்றதைக் கல்வி கேள்வி முதலியவற்றூற்றெரிந்த நமது நண்பர்களியாவருக்குந் தெரிவிப்பதியாதெனில்,

பூர்வீகத்திற் செய்த புண்ணியபாவங்களுக்குத் தக்கவாறு ஜென்மமெடுத்து அவரவர் கர்மானுபவங்களை யனுபவித்துத் தீரவேண்டுமெனச் சுருதிகளேற்பட்டிருந்த போதிலும், நாம்பெற்றிருக்கின்ற இந்தச் சரீரத்திலுண்டாகிய குறைகளைத் தெரிந்து, அவைகளை நிவர்த்தி செய்யும் உபாயம் இன்னதென்றுணர்ந்து, புத்தியினல் நிச்சயிக்கப்பட்டதே மருந்தாம். இந்தத்தேகம் பஞ்ச பூதங்களாலுண்டாகிய தென்பது இவ்வுலகத்திலுள்ள எச்சாதி வைத்திய பண்டிதர்களும் கல்விமான் முதலிய பெரியோர்களும் ஏகோபித்து ஒப்புக்கொண்டவிஷயமாதலால், ஒருவன் வெயிலிலே கடுநடைநடந்து செல்லும்பொழுது சரீரமெல்லாம் வியர்வைநீர் சிந்தி நாவும் வரட்சியடைகின்றது. அவன் நடக்கத்தொடங்கிய காலத்தில் நன்னிலையிலிருந்த சரீரமும் நாவும் சிலதூரம் சென்றபிற்பாடு வியர்வையும் வரட்சியும் வந்ததற்குக் காரணத்தை நிதானிக்கும்போது, அவனுடைய சரீரத்திலும்நாவிலும் பூரித்து நின்ற நீரானது பிரிந்து குறைந்ததாலன்றோ? அச்சமயத்தில் அவன் விரும்பியது தண்ணீரல்லவா? அதுபோல சரீரத்தில் எந்தப் பூதச்சத்துக் குறைந்ததோ அந்தப் பூதச்சத்துக்களை யறிந்து ஊட்டப்படுவதே மருந்தாம். மகரிஷிகளும் ஏனையபெரியோர்களும் மருந்துகளை யாராய்ந்து தேர்ந்து கொண்டதும் இவ்வாறே.

சரீரத்திலுள்ள பிரகிருதபேதத்தை நாடி, முகம், மலம், நீர், கண், நா, சரீரம், தொனி யெனும் எட்டையும் பரீக்ஷித்தறியவேண்டும். அக்காலத்தில் நாடிமுதலிய சுபாவம் பேதப்படுமாகில் நோயின் உண்மையை யறியவேண்டும். அந்தநோய் காலபேதம், தேசபேதம், மிக்

கமனமுயற்சி, மிக்கதேகமுயற்சி, உணவு வேறுபாடு, மிக்க துக்கம், மிக்க சந்தோஷம், பழைய நோய், ஒட்டுநோய், பாரம் பரியநோய், சைசவ முதலிய அவஸ்தை வேறுபாடுகள், புணர்ச்சி, சரீரவூறுஎன்பவற்றுள் எதனால் வந்ததென்று ஆராய்ந்தறியவேண்டும். அப்பால் அந்நோய் இன்ன நோயென நிச்சயஞ் செய்தல் வேண்டும். எல்லாக் குணங்களுமொத்து ஒரே யொன்றில் மாத்திரம் வேறுபாடுள்ளதாகிய ஓரினவியாதிகள் அனேகமாதலால் அதுவோ இதுவே மற்றெதுவோவென மனதிற் சந்தேகம் நீங்க, இது இன்ன நோய்தானென்று நிச்சயித்துக்கொள்ளாமற் செய்யப்படும் சிகிச்சையால் நோய் நீங்காது அதிகரித்தமாத்திரத்தில் நிற்காமல் சீவமோசத்திற்கும் ஹேதுவுண்டாகின்றது. ஆதலால் நோயை நிதானிக்காமல் ஔஷதப் பிரயோகம் செய்யவே கூடாது.

இஃதையுணராமல் சில வைத்தியர்கள் நல்ல மருந்துகளைத் தங்கள் கைவசத்தில் வைத்துக்கொண்டிருந்த போதிலும வியாதியை ஆராய்ந்து பார்க்காமல் கொடுக்கும் பிரயோசனம் பேடிகையிலிருக்கும் ஆயுதத்தைப் போலாகும்.

தலைவலிக்கு ஒருமருந்தகப்பட்டு விட்டால் அதை யெல்லாத்தலைவலிகளுக்குங் கொடுத்துவிடலாமா? இன்ன காரணம் பற்றி யெழுந்த தலைவலி, இதற்கு இதுஆகும், இது ஆகாது, இதுகொடுத்தால் இன்னதுண்டாகுமென்றுணராது பிரயோகிப்பது கூடாது. காரணந் தெரியாமற் கொடுத்த விடத்தில் அது பலிக்காமற் போகுமாயின் அதையருந்திய நோயாளிகள், சீ, இம்மருந்தாகாது இனி மற்றொரு மருந்தைச் சாப்பிட வேணுமென்றெண்ணிப் பெரியோர் முறைப்படி செய்தமருந்தை யிகழ்ந்து விடுகிறார்கள். ஆதலால் நோய் நிதானந் தெரிந்துதான் மருந்துகளை யுபயோகிப்பது முக்கியமாம்.

இப்படியே யிக்காலத்தில் ஊரெல்லாம் வைத்தியர்கள் ஆயிரக்கணக்காய்ப் புறப்பட்டு விட்டார்கள். வைத்தியமென்பதற்கு மரியாதையும் போய்விட்டது. மருந்து என்றால் பொய்யும் மோசமுமெனப் பெயராகிவிட்டது. வைத்தியஞ் செய்யத் தெரியாதவரெல்லாம் பணப்பைத்தியம் பிடித்துப் பிழைக்கும் வழியறியாமல் வியாதியொன்றிருக்க மருந்தொன்றைக் கொடுத்து நோயாளிகளை யவதிக்குள்ளாக்கிறார்கள். அம்மருந்துகளை வாங்கி யேமாந்தஜனங்கள் உள்ளவியாதியுந் தீராமல் இல்லாத வியாதியுமுண்டாகி முன்னிலும் அதிக கஷ்டத்தையடைந்து ஆறாத்துயரடைகிறார்கள் அதினால் வேறே மருந்து சாப்பிடவும் நம்பிக்கையில்லாமற் போய்விடுகின்றது.

தவிரவும் அநேக வைத்தியர்கள் தாதுபுஷ்டிக்கும் மற்றுஞ் சில நோய்களுக்கும் பலவிதமான மருந்துகளைச்செய்து அவைகள் ஒவ்வொன்றும் அநேக வியாதிகளைக் குணப்படுத்துமென நோட்டீசுகளையும் கேட்லாக்கு களையும் பத்திரிக்கைகளையும் ஏராளமாயேற்படுத்திப் பயிரங்கப்படுத்தி யிருப்பதின் மீது, சில நோயாளிகள் அவரவர்களுக்குத் தேவையான மருந்துகளை நேரிலும் தபால் மூலமாயுந் தருவித்துச் சுகம் பெறாததினால் மருந்துகள் பிரயோசன மில்லை யென்றும் பத்திரிகை முதலானவைகளில் எழுதியிருப்பதெல்லாம் பெரும்புழுகென்றும் ஏளனம் செய்வதால் உண்மையான மருந்துக் கம்பெனிகளுக்குரிய யோக்கிதையும் போய்விடுகின்றது. அதானதுமருந்துக்குற்றமுமில்லை, வாங்கி உபயோகிக்கிறவர் குற்றமுமல்ல. நாம் மேலே சொல்லிய பிரகாரம் நாடிமுதலிய சுபாவம் பேதமடைந்து வியாதி வந்ததற்குள்ள காரணத்தையும் நுட்பத்தையும் ஆராய்ச்சி செய்யாமல் மருந்து கொடுப்பதினாலேயே மிகப்பிரையாசையும் சிரமுமெடுத்து முடித்த உயர்ந்த விலையுள்ள மருந்துகளுக்கும் நன்மதிப்பேற்படுகிறதில்லை.

ஆதலால் நண்பர்காள்! மற்றக்கம்பெனியார் பிரசித்தஞ் செய்திருப்பதைப் போல நாமும் ஏதோ பயிரங்கப் படுத்தியிருப்பதாயெண்ணாமல் ஒவ்வொரு பூமான்களும் ஸ்திரீகளும் தங்களுக்குரிய வயதையும் இன்னாள் தொடங்கி இன்னாள்வரை யின்னின்ன வியாதிகள் வந்து சௌக்கியமாகி இப்போதுதேகம் இன்ன நிலமையிலும் வியாதியின்ன ஸ்திதியிலு மிருக்கிறதென்று விபரமாயெழுதியாவது அல்லது நமது நேரில் வந்தாவது தெரிவித்து மருந்துகளைவாங்கி யுபயோகித்துப்பார்த்தால் மட்டுந் தெரியவருமே யொழிய இதில் விஸ்தரித்தெழுதுவதில் பிரயோசனமே யில்லை.

பெருநோய் முதலான கொடிய வியாதியையுடையவர்களும் பலவிதமான மருந்துகளைத்தின்றுந் தீராத நோயையுடையவர்களும் அவரவர்களுக்குரிய ஜெனன ஜாதகத்தை ரூபாய் ஒன்று கட்டணமும் ரிப்பிளைக்குத் தபால்சார்ஜ் அணா அரையும் அனுப்பினால் அகஸ்தியர் தன் மந்திரி தூது லெட்சணம் பார்த்து அந்தவியாதிக்கு மருந்து கொடுப்பதின் மூலம் சௌக்கியமாகுமென்று கிரக நிலைகளில் தோன்றினால் மட்டும் ஔஷதப்பிரயோகஞ்செய்வோமே யொழிய, கிரகநிலை சரியில்லாவிடில் வீண்சிலவுக்குட்படவொட்டோம். வைத்தியசாஸ்திரந் தெரிந்த ஒரு பண்டிதனுக்கு ஜோதிடஆரூட சாஸ்திரமுந் தெரிந்திருக்க வேண்டியது முக்கியமெனக்கருதிக் கற்றுணர்ந்திருக்கின்றோம்.

ஆகையால் பலவிதமான வைத்தியங்களைச் செய்தும் சௌக்கிய மாகாமல் நமது முன்பாகவரும் கொடிய வியாதியஸ்தர்களுக்கு ஜாதகம் பார்த்துத்தான் மருந்து கொடுக்கிற தென்ற வழக்கத்தையனுஷ்டித்து வருகின்றோம். மேற்கண்ட கொடியவியாதிகள் தீர்வதற்கு ஏதேனுங் கிரகபரிகாரஞ் செய்யவேண்டியிருந்தால் ஆராய்ந்து சொல்வோம் மற்றப்படி ஜாதகங்கள் பார்த்து அவர்களுக்குரிய ஆயுள்பாகம், புத்திரபாகம், யோகபாக முதலானவைகள் சொல்லவேணுமென்றாலும் அடியிற்கண்டபடி சார்ஜுகள் வாங்கிக்கொண்டு சொல்லவும் தயாராயிருக்கின்றோம்.

ஜோதிடம், ஆரூடம், வைத்திய விஷயமாய் நாம் தெரிந்து கொண்ட அனுபோக சித்தாந்த கைவல்ய நவநீத நூல்களைக்கேட்டால் ஆச்சரியப் படத்தக்கதாயிருக்கும். அஃதைக் கேட்டவர்கள் சொன்னாலும் நேரில் சம்பாஷித்தாலொழிய சந்தேகம் நீங்காது. அதாவது ஒரு மனிதனுக்கு நடக்குந்திசையில் ஒரு புக்தியின் பலனை நம்மிடம் சார்ஜு கொடுத்து எழுதிப்பார்த்து அஃது சரியாயிருக்குமானால் மட்டும் நம்மிடம் ஜாதகம் எழுதிக்கொள்ளத்துணியுங்கள்.

பலவைத்தியர்களிடத்திலும் ஔஷதங்கள் வாங்கி யுபயோகப் படுத்தியும் சௌக்கியமாகாத பிணியாளர்கள் நம்மிட நேரில்வந்து மேலே சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் ஜாதக ரீதியாய் வேண்டிய பரிகாரங்களைச் செய்துகொண்டு அப்பால் நம்மிடம் மருந்து வாங்கி சாப்பிடுங்கள். அதின் பிற்பாடு வியாதிகள் தீர்ந்தசங்கதியனுபவத்திற் றெரியவருமேயல்லாது இதில் எழுதியிருப்பதைப் பார்த்ததினால் மட்டும் அறியமுடியாது.

ஆனதினாலே இல்லற தருமத்தினின்றும் லௌகீக விஷயங்களில் வழுவாமல் நடக்கும் நண்பர்கள் இநத நேத்திராங்கமாகிய ஜோதிட வைத்திய சாஸ்திர மறிந்தவர்களிடத்தில் ஔஷத முட்கொள்வதே மிகவும் உத்தமம்

பூதபவிஷ்ய வர்த்தமான மென்ற மூன்று காலத்தினுடைய நன்மை வகையறுவை யொருவர் நம்மிடத்தில் வந்து ஒரு காரியத்தை நினைத்துக்கொண்டு அஃதென்ன வென்று கேட்பார் களானால், நினைத்ததையுஞ்சொல்லி அவை யிப்படி யாகுமெனவும் முருகக் கடவுளின் றிருவருளாற் பகரலாகும். அதற்குத் தரவாரியாக ரூபாய் ஒன்று முதல் ஐந்து வரை சார்ஜ்கள் ஏற்பட்டிருக் கின்றன

பூமி, சல்லியம், பூத விஷயமான கோளாறுகள் வீட்டினிடமா யிருக்கும் நன்மை தீமை வகையறுக்கள் இன்ன விதத்தால் நேர்ந்தது, அல்லது காலானு கூலப்பலனால் அனுபவிக்கும்படி நேர்ந்தது, அதற்கு இவ்வளவு காலத்தில் இன்ன வித பரிகாரத்தால் தீரும், தீராதெனப் பகர சார்ஜ் ரூ 5 0 0.

ஜாதக வசாத்தாக ஆயுள்பாகம், யோகபாகம், தனபாகம், சகோதரபாகம், களத்திரபாகம், புத்திரபாகம் இவ்வாறு பாகமும் பார்த்துச் சொல்வதற்கு சார்ஜ் ரூ 1 0 0

நட்ட ஜாதகக் கணிப்பதற்கு சார்ஜ் ரூ 5 0 0

லெக்கினஸ் புடம், லெக்கின நிச்சயம். திசை பிரித்து, இராசி அம்சம் போட்டுக் குறிப்பு எழுதிக் கொடுப்பதற்கு சார்ஜ் ரூ 2 0 0

விவாகம், சாந்தி, ஸ்ரீமந்த முகூர்த்தம், வீடு குடி புகுதல், யாத்திரை செய்தல், வியாபாரஞ் செய்தல், வீடு கட்டுவதற்கு முகூர்த்தஞ் செய்தல் இவைகளுக் கெல்லாம் தினம் பார்த்து எழுதிக் கொடுப்பதற்குச் சார்ஜ் ரூ 2 0 0

ஷை ஆறு பாகத்தில் புத்திர பாகத்தைப் பற்றிப் பரிகாரத்தினால் உற்பத்திக் கிடமுண்டாவதா யிருந்தால், ஸ்மிருதிப் படிபார்த்து பரிகாரஞ் செய்யும் விஷயங்களை வரைந்து கொடுப்பதற்குச் சார்ஜ் ரூ 5 0 0

ஒரு ஜாதகத்திற்கு ஒரு திசை வரை புக்திபலன் வரைந்து கொடுப்பதற்கு சார்ஜ் ரூ 15 0 0

பக்தி விசுவாசத்துடன் கேட்போர் களுக்கு மாத்திரம் மேற்கண்டவைகள் சொல்லப்படும். பரீக்ஷிப்போர்களுக்கும், கபடமாகக் கேட்போர்களுக்கும் எவ்வளவு சார்ஜ் கொடுத்தபோதிலும் சொல்லத் தக்கதன்று. ஜோதிட சாஸ்திரமே இரகசிய விஷயமாதலால் நன்மையான மனிதர்களைவைத்துக்கொண்டு கேட்கவேண்டும்.

ஜாதகம் கணிக்கக் கொடுக்குங்காலத்தில் பாதிசார்ஜ் கொடுத்துவிடவேண்டும். பின்பு அதைப் பெற்றுக்கொள்ளுங்காலத்தில் மீதம் பாதிசார்ஜையும் கொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டும்.

ஜெனனஜாதகக்குறிப்பு சரியாக இருக்கவேண்டும் ஜாதகவசாத்தாகவே ரோகஸ்தானம் திட்டமாய்ப்பார்த்து தீரும்தீராதென்று பகரலாகும்.

மேற்கண்டவிபரங்களைக் கேட்க விரும்பும் நண்பர்கள் குறிப்பிட்டசார்ஜில் முன்னடி பாதிச்சார்ஜ் அனுப்பவேணும். பலன்களையெழுதி வி. பி. மூலமாயனுப்பியபின்பு அதைப் பெற்றுக்கொண்டு மீதம் பாதிச்சார்ஜையும் அனுப்பிப்போடவேண்டியது. தபால் சார்ஜ் பிரத்தேகம்.

இந்தக் கேட்லாக்கில் சொல்லப்பட்டிருக்கிற வியாதிகள் தவிர, மற்றுமுண்டான எவ்வித நோய்களையும் அனுகூலஞ் செய்யத்தக்க ஔஷதங்களைக் கொடுக்கவும் எதிர்பார்த்திருப்பதால், மேலே சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் நோயின் விபரங்களைத் தெளிவாய்த் தெரிவித்தால் அதற்குரிய ஔஷதங்களை முடித்துக் கொடுத்துச் சுகப்படுத்தவும் தயாராயிருக்கின்றோம்.

ஆர்டர் அனுப்பும்போதே பாதிக்கிரயம் முன்னடியனுப்புவோர்களுக்கு மாத்திரம் வி. பி. மூலமாய் மருந்து அனுப்பலாகும்.

சண்முகநாதன் துணை.

இங்ஙனம்,

**கெ. வி. கோவிந்தசாமி அன்கோ**

**ஜோஸியம், வைத்தியம்,**

**மேலச்சித்திரைவீதி,**

**மதுரை.**

## தாதுநஷ்டமுண்டாவதற்குக் காரணமும், அதற்குப்பரிகார மருந்துகளும்.

பாலியர்முதல் விருத்தர்வரையிலும் நாதவிந்தானது உடைந்து நீற்றுப்போவதின் மூலமாய் சம்போக சக்திகுறைந்து கீழ்கண்ட துற்குணங்களாற் சந்தானவிர்த்தி யடைவதுங்கெட்டுத் துயரடைவது நமது இந்தியநண்பர்களின் இயல்பென்பதை யாவருந்தெரிந்திருக்கலா மெனினும் அந்நாத விந்தானது உடைந்து விரியவிர்த்தி யில்லாமற் போவதற்குச் சுருதி,யுக்தி, அனுபவ ஒற்றுமைக்கும். நமதுமுன்னோர் களும் நாமும் தெரிந்துகொண்ட வரையிலுமுள்ள காரணங்களை இத னடியிற் கொஞ்சஞ் சுறுக்கமாய்க் கூறுகின்றோம்; அஃது யாதெனில்,

1. இந்திரியம் உற்பத்தியாகிற காலமாகிய அதிபால்யத்திலேயே கலவிக்கு ஆரம்பஞ்செய்தல்.
2. இராமுழுவதும் நித்திரையின்றி ஓயாமற்கலவிசெய்தல்.
3. கெட்டநோயுள்ள ஸ்திரீகளிடத்திலும் தனக்கு முதிர்ந்தவய துடைய ஸ்திரீகளிடத்திலும் சம்மந்தப்படுதல்.
4. வெகுநாளாக கலவியே இல்லாதிருத்தல்.
5. ஆண்பாலர்கள் ஒன்றோடொன்று சம்மந்தப்படுதல்.
6. கரத்தால் இந்திரிய ஸ்கலிதமாக்குதல்.
7. அதிகநடைநடக்குதல்.
8. பற்பலதேசங்களிற் சஞ்சாரமேசெய்து கொண்டிருத்தல்.
9. அகாலபோசனஞ்செய்தல்.
10. ஓயாத மனக்கவலையை யடைதல்.
11. எந்நேரமும் காப்பியையருந்துதல்.
12. புளியை போசனபதார்த்தங்களில் ஏராளமாய்ச் சேர்த்துப் புசித்தல்.
13. அதிக உஷ்ணமானபதார்த்தங்களை யுட்கொள்ளுதல்.
14. அதிக குளிர்ச்சியான பதார்த்தங்களை யுட்கொள்ளுதல்.
15. கைப்பு, துவர்ப்பு, பதார்த்தங்கள் குளிர்ச்சியுடைய தென் றெண்ணி யதிகமாயருந்துதல்.
16. பக்குவக்குறைவான பதார்த்தங்களை யுட்கொள்ளுதல்.
17. கள், சாராயம், அபின், கஞ்சாமுதலான லாகிரிவஸ்துக்களை யுட்கொள்ளுதல்.
18. அடிக்கடிதாம்பூலம், புகையிலை, சுருட்டு, சிகரேட் முதலா னதை யுபயோகப்படுத்துதல்.

இவ்வித வழக்கங்களை யனுஷ்டிப்பதால் இரத்தவிர்த்தி குறைந்து இந்திரியம் நீற்றுத், தேகம் வெளுத்துப், பெலஹீனத்தை யடைந்து, நரம்புகள் தளர்ந்து, மூளையிற்கொதிப்பேறி உந்திக்கமலமுதல் நீர்த் தாரைபரியந்தம் வெந்து புண்ணுண்டாகி, ஈரல் உலர்ந்தும்லிங்கத்தில் கபநீர்கட்டியும், உஷ்ணம், வெள்ளை, வெட்டை,சுரம், க்ஷயம், தலைவலி, அதிசாரம், கிராணி, வாதாதிக்கம், மூலமுளை, நீரிழிவுமுதலிய ரோகங்கள் ஏற்படுவதற்குக் காரணமாயிருக்கின்றன. இதனாலேயே தாது விர்த்தியுங்குறைகின்றது. இஃதையுணராமல் சில்வைத்தியர்கள்பொதுவாக தாதுபுஷ்டிக்குஅல்வா, லேகியம், பஸ்பம், செந்தூரம், குளிகை, மாத்திரைகளென்றும், ஸ்தம்பனமெழுகென்றும், ஜீச்சுமருந்தென்றும் பலவாறாக நாமங்களை யேற்படுத்திப் பத்திரிக்கைகளிலும், நோட்டீசுகளிலும், கேட்லாக்குகளிலும், விசித்திரமாகவும் பிரமிக்கக் கூடியதாகவும் பிரசித்தப் படுத்தி யிருப்பதைப் பார்த்தமாத்திரத்திலேயே சில நண்பர்கள் மயங்கி வி. பி. முலமாய் மருந்துக ளனுப்பும்படி யெழுதித் தருவித்துச் சாப்பிட்டதின்பேரில் அவ்வகள்யாதொரு பயனையுங்கொடாமையால் மருந்துகளையலட்சியஞ் செய்து அப்படியனுப்பிய வைத்தியக்கம்பெனியாரையும் இகழ் கிறார்கள். அதானது உபயதரப்பிலும் குற்றம் ஏற்பட்டிருக்கின்றது. காரணம் யாதெனில், தாதுபுஷ்டிக்கு அவரவர்கள் மனோகரப்படி யெவ்விதமான ருசியை விரும்புகிறார்களோ அந்தந்த ருசிகரமான பதார்த்தங்களில்தேகஸ்திதி, வியாதியின் தன்மைக்குத்தக்கபடி யென்தெந்த ஔஷதங்களைப் பிரயோகஞ்செய்யவேணுமோ அந்தந்த ஔஷதங்களைக் கொடுத்தால் மட்டும் தாதுவிர்த்தியையுண்டாக்குமேயொழிய, பொதுவாக எல்லோருக்கும் ஓரேவிதமான மருந்துகளை யுபயோகப்படுத்துதல் கூடாவாம்.

ஆகையால் அன்புமிகுந்த நண்பர்காள்; மேற்கண்ட தாதுபுஷ்டிக்கு நமது முன்னோர்களாலும் நம்மாலும் கையாண்டுவந்த அனுபவ சித்திபெற்ற ஔஷதங்கள் அடியிற் குறிப்பிட்டிருக்கிறபடி ஆறுவிதமாக முடிக்கப் பெற்றிருக்கின்றது.

அவைகளை 45-நாள் ஒருமண்டலம் உபயோகிக்க வேண்டியது. அப்படி யுபயோகிப்பதற்கு அவரவர்களுக்கு இன்னவயதில் இன்னவியாதி இன்னகாலத்தில் நேர்ந்ததென்றும், இப்போது இன்னவயது தேகஸ்திதி வியாதியின்குணம் இன்னதென்றும், இன்னருசியில் விருப்பமென்றும், விபரமாய்நமக்குத்தெரிவித்தால் அவைகள் நிவர்த்தியாகித் தாது விர்த்தியடைவதற்குரிய மருந்துகளை யவரவர்கள் சரீரக்கூறுக்கும் அ

பேக்ஷிக்கும் ருசிகரத்துக்குந் தக்கவாறு மருந்துகளை யனுப்பத்தயாரா யிருக்கின்றோம். மருந்துகளை யுபயோகிப்பதற்குரிய முறைகளை மருந் துடனே யனுப்பும் டயரெக்ஷன் மூலமாய்த் தெரிந்துகொள்ளலாம். மற் றக்கம்பெனியிலுள்ள மருந்துகளைப் பார்க்கிலும் நம்மிடத்திலுள்ள ஔஷதங்கள் சிலாக்கியமென்று நாமே மெச்சிப்புகழ்வதிற் பயனில் லையாகச்சே மேற்கண்டவிபரங்களுடன் எழுதித்தருவித்து ஒருமுறை யருந்துவார்களேயாகில் அதினுடைய பிரயோசனம் தெரியவரும் நம்புங்கள்! நம்புங்கள்!! வற்புறுத்தியும் உண்மையோடும் கூறலானோம்

## 45-நாள் உபயோகப் படுத்துவதற்குரிய தாதுபுஷ்டி மருந்துகளும் அவைகளின் கிரயமும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. பேரிச்சங்காய் கிருதம். | ரூ | 2 | 8 | 0 |
| 2. வித்தாதிக்குளிகை. | ரூ | 2 | 8 | 0 |
| 3. மதயானைக்குளிகை. | ரூ | 2 | 8 | 0 |
| 4. பேதனுவினா அல்வா. | ரூ | 2 | 8 | 0 |
| 5. ஆலமபால் குளிகை. | ரூ | 2 | 8 | 0 |
| 6. மணிவிந்தாதி லேகியம். | ரூ | 2 | 8 | 0 |

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## கோர்ப்ப உற்பத்திக்கு சந்தான கருணி யென்னும்

# மூலிகை உப்பு.

இவ்வுலகின்கண் மானிடஜென்மம் பெற்ற உத்தமஸ்திரீகளில் அநேகர் சந்தானவிர்த்தி யில்லாமைபற்றி மனோ வியாதியால் வருந்தி தேகமெலிவுற்று வாடுவதை மாற்றித் தென்புலத்தார் கடன் தீர்க்கும் புத்திரப்பேறடைய, கொர்ப்ப உற்பத்தி காரணமாதலால் அஃதுண்டா வதற்கு ஆயுர் வேதங்களை முற்றுமுணர்ந்த ஆன்றோர்களால் தொன் றுதொட்டுக் கையாண்டுவரும் அநேக ஔஷதங்களில மேற்குறிப்பிட் டிருக்கின்ற உப்பையே சிறந்ததெனத் தெரிந் தெடுத்திருக்கின்றனர். இஃது நீடித்தகால அனுபவ சித்தியுள்ளது, அனுபவித்தயாவர்களா லும் புகழ்ந்தோங்கப்பெற்றது, மனதிற்குமகிழ்ச்சியைத் தரத்தக்கது, இதனால் உண்டாகும் குணங்களாவன.

சிலஸ்திரீகள் காலந்தவறி முன்பின்னாகச் சூதகமாவதை மாற்றி வழக்கமபோல் மாதவிடாயாகும்படி செய்விக்கும்; அவ்வாறுசூதகமாகுங்காலத்திலுண்டாகும் வயிற்றுவலியை நீக்கும்; உதிரந்தங்கி உருண்டுதிரண்டு புரண்டு வலிக்கிறதையும் சரியான ரஜஸ்வலைகாணாமல் கொஞ்சங் கொஞ்சமா யுண்டாவதையும் அகற்றித் தாராளமாய் வெளியேறும்; கெர்ப்பந்தரிக்குமிடத்தில் பாசுபடர்ந்து கருத்தங்கவொட்டாமற் கெடுதிசெய்யும் ஒருபக்கம் தலைபுள்ளபுழுக்களேயும் இருபக்கம்தலையுள்ள புழுக்களையும் மலத்தின் வழியாகவும் மர்மஸ்தானத்தின் வழியாகவும் வெளியேற்றிச் சந்தான விர்த்தியை யுண்டாக்கும். அப்புழுக்களை நாம் பரிசீலனைசெய்தும் பார்க்கலாம். அவைகளை மலட்டுப்புழுக்களென ஆன்றோர்களால் கூறப்பட்டுமிருக்கின்றன. கெர்ப்பந்தரிப்பதற்குக் கேடாயிருக்கும் ஆறுவிதநோயை அடியோடேயறச் செய்யுமென்பது திண்ணம். இந்த உப்பானது உலகப்பிரசித்திபெற்ற மஹான்களுடைய முறையை வழுவாது அனுஷ்டித்து அநேக வனங்களிலும் மலைகளிலுமுள்ள மூலிகைகளைக் கொண்டும் நீடித்தநாள்ப்பிரயாசையின்பேரிலும் முடிக்கப்பெற்ற போதிலும் லோகோபகாரமாய் குறைந்தவிலைக்கே கொடுத்துவருகின்றன.

இதன்குணத்தை மேற்கண்டபடி மனவாதையிலாழ்ந்து வாடுகிறவர்கள் வாங்கியருந்தினால் மட்டுந் தெரியவருமே யொழிய இதில்விஸ்தரித்து எழுதுவதில் யாதுபயன்? சந்தானவிர்த்திக்கு இஃதே முக்கிய ஔஷதம்.

மூன்றுமுறை இந்த உப்பைச் சாப்பிட்டதின்பேரிலும் கெர்ப்பந் தரிக்காவிடில் அப்பெண்களுக்கு எப்போதும் சந்தானவிர்த்தியேயில்லையென ஆன்றோர் வாக்கியமும் ஏற்பட்டிருக்கின்றன.

ஸ்மிருதிகளிற் கூறியிருக்கிற பிரகாரம் ஸ்திரீகள் பூதப்பைசாசுகளாலும் நோயினாலும் கிரகசாரத்தினாலும் ஆடவர்களின் வீரியக் குறைவினாலும் ஓயாத கலவியாலும் மலடாகிறார்களே யொழிய வேறில்லை. ஷை பூதப்பைசாசு கிரகசாரமுதலிய தோஷங்கள் நிவர்த்தியாவதற்கு ஆதாரமாயுள்ள எந்திரங்களினால் ஸ்மிருதிப்படி பரிகாரஞ் செய்வித்தால் அனுகூலமாகுமெனக் கூறியநமது அனுபவசித்தாந்தத்தை நன்றாயுணர்ந்த அநேக புத்திமான்களுமிருக்கின்றார்கள். அதற்கு நற்சாக்ஷிப்பத்திரங்களுமுண்டு; இம்மருந்துக்குப் பத்தியமென்பதே கிடையாது.

ஆனால் இதை உபயோகிக்கும் ஸ்திரீகள் நடந்துகொள்ள வேண்டியவிபரத்தை மர்மமாகச்சொல்லி யிருப்பதனாலே அதையிதில்வரையமுடியாமல் மருந்துடனனுப்பும் டயரெக்ஷனில் தெளிவாய்க்கூறியிருக்கின்றதைப்பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| ஒருமுறை 11 நாள் சாப்பிடக்கூடிய உப்பின் கிரயம் ரூ | 1 | 0 | 0 |
| மூன்றுமுறை 33 நால் சாப்பிடக்கூடிய உப்பின்கிரயம் ரூ | 3 | 0 | 0 |

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## சல்லியகருணியென்னும் சுத்துச்செந்தூரம்.

ஸ்திரீபுருஷாள் இருபாலரும் காமமுறும்போதெல்லாம் ஓயாமற் கலவி செய்வதால் மூலக்கொதிப்பு அதிகரித்து முதுகு, இடுப்பு, அடிவயறு, நாபி, இவைகளில் வலியும், குய்யம், கோசம், இரண்டிலும், இரணமாக நோவுண்டாகிப் பின்பு நாடியுடன் கலந்துசுக்கில சுரோணிதம் உருகுவதால் நீரிழிவு, நீரெரிவு. நீர்க்கடுப்பு, நீர்ச்சுருக்கு, நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, மதுமேகம், புலால்மேகம், உப்புமேகம், சுண்ணமேகம், சுக்கிலமேகம், தந்திமேகம், இரணமேகம், மேககாங்கை, எலும்புருக்கி, சூலை, கள்ளிப்பூக்கிரந்தி, அரையாப்பு, பவுந்திரம், பிரமேகம், இரத்தப்பிரமியம், சீழ்ப்பிரமியம், கிருசனமுதலிய பலநாமங்களைக் கொண்ட மேகரோகங்களிலிருந்துசம்பவிக்கின்றன. இவைகளைத்தவிர சிலர்களுக்கு வடிநீர்போலும், மோர்போலும், மஞ்சள்போலும், அரளிப்பூப்போலும், ஸ்திரீபுருஷர்கள் அணியும் ஆடைகளில் வட்டம் வட்டமாய் ஒட்டுகிறவெட்டையும மலமிறங்குங் காலத்தில் முக்குவெட்டையும் உண்டாகும்.

இவ்விதவியாதிகள் ஆரம்பத்தில் இடுப்பு, முதுகு, முழங்கால், முழங்கை முதலான கணுக்களிலுள்ள எலும்புகள் உளைவெடுத்துத் தேகத்தில் அயர்வுண்டாகிக் குனிய நிமிரமுடியாமலும் வெட்டை வாய்வு, தமரகவாய்வு, அண்டவாய்வு, கண், கை, கால, தலைஎரிவும் மயிர் உதிர்தலோடு நாளுக்குநாள் இரத்தவிர்த்தி யில்லாமல மூளை வரட்சியுண்டாகி அன்னாகாரங்களை யருந்துவதற்கு மனம் ஓர்மைப்படாமலும் நாளடைவிலே தேகங்குன்றியும் எந்நேரமும் தண்ணீர்த் தாகமேயுண்டாகிக்கொண்டிருக்கும். இதையிலேசாயெண்ணக்கூடாது. வெட்டைமுற்றினால் மேகம், மேகமுற்றினால் சூலை, சூலைமுற்றினால் குஷ்டமெனவும் நூல்கள் ஓலமிடுகின்றன.

இவ்வியாதிகளை வேரறக்களையக்கூடிய ஔஷதம் இச்சல்லியகருணியெனும் சத்துச்செந்தூரமென்றே சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றனர்.

நம்முடைய முன்னோர்கள் மூன்றுதலைமுறையாகத் தொன்றுதொட்டுக் கையாண்டுவந்த இச்செந்தூரத்தை நாமுங்கைப்பற்றி மேற்சொல்லிய வியாதியஸ்தர்களுக்குக் கொடுத்து வருகின்றோம். முருகன் கிருபையால் ஔஷதம் உண்டவர்கள் ஆனந்தசர்கரத்திலாழ்ந்திச் சுகமடைந்திருக்கின்றார்கள். வெள்ளை, வெட்டையானது வைத்தியர்களையேமாத்துகிறவியாதி யென்பது உலகப்பிரசித்தமாய்த் தெரிந்தவிஷயம். ஆகலால் இந்தச்செந்தூரத்தால் ஷை வெள்ளை வெட்டையில் அவஸ்தையடைகிறவர்கள் இரண்டுமணி நேரத்துக்குள்ளாகச் சுகமடைந்து ஆனந்தத்தையடைவார்களென்பது திண்ணம். பரீக்ஷித்துப் பார்க்கலாம்.

மேற்சொல்லியவியாதிகள் பலவற்றிற்கும் மூலாதாரமான மருந்து இச்செந்தூரமே யெனினும் வியாதியின்குணத்துக்கு அனுப்பான முறையையும் சாப்பிடும் விதத்தையும் மருந்துடனனுப்பும் டயரெக்ஷன் மூலமாய்த் தெளிவாகத்தெரிந்துகொள்ளலாம்.

இதன் மகிமையையும் பெருமையையும் நாமேயெடுத்துரைப்பதில் தற்புகழ்ச்சியாகுமெனக் கருதிச்சுறுக்கமாக வரைந்தோம். அனுபவித்தவர்களுக்கே இதன்மகிமை தெரியவரும்.

இம்மருந்தை புருஷர்கள் 22 தினமும், ஸ்திரீகள் 11, தினமும், காலை மாலை இரண்டு வேளையும் அருந்தவேண்டும்.

22 தினம் சாப்பிடக்கூடிய மருந்தின் கிரயம் ரூ 4—0—0

11 தினம் சாப்பிடக்கூடிய மருந்தின் கிரயம் ரூ 2—0—0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

சகலமான வாய்வுகளுக்கும்,

## உலாந்தா லிங்க செந்தூரம்.

இம்மருந்தினால் வாய்வு, பித்தவாய்வு, உஷ்ணவாய்வு, பக்கவாய்வு, மேகவாய்வு, வெட்டைவாய்வு, உடம்பெங்கும் ஓடியோடிக்குத்தல், கை கால், குடைதல், இடுப்பு அயர்வு, வயற்றுவலி, கணுக்கால், கணுக்கைகளிலுண்டாகும் வலிகள், முதலானவியாதிகள் தீரும்.

இதையுபயோகிக்கும் விபரங்களை டயரெக்ஷனிற் கூறியிருக்கின்றோம் அதை மருந்துடனேயனுப்பலாகும்.

ஒருவிராகனிடை செந்தூரம் விலை ரூ 7—0—0
வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

பித்தசோகைக்கு

## கரிப்பான்லேகியமும், அயச்செந்தூரமும்.

கண்ணிலும், கால், கைகளிலுள்ள நகங்களிலும் இரத்தம் வற்றி அதனால் வெளுப்புண்டாகி யெவ்விதமான அறுசுவை பதார்த்தங்களை யருந்தினபோதிலும் நாவிற்கு யாதொரு ருஜியுந்தோற்றாமல் நாளுக்குநாள் தேகமெலிந்து பெலங்குறைந்து நரம்புகள் தளர்ந்து நடக்கச் சக்தியில்லாமலும், உட்கொண்ட ஆகாரங்கள் ஜீரணிப்பதற்குக்கருவிகள் கெட்டுப்போயிருப்பவர்கள் ஷை லேகியத்தையும் செந்தூரத்தையும் 11 நாள் உட்கொண்டால் மேற்கண்ட குணதோஷங்களெல்லாம் நிவர்த்தியாகித் தேக சௌக்கியத்தைக் கொடுக்கும் இதை யருந்துவதற்குரிய விபரஙகளெல்லாம் டயரெக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது.

11 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் விலை ரூ 1—0—0
ஷை அயச்செந்தூரம் விலை ரூ 2—8—0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## மூலகிராணிச்சூரணம்.

இந்தச்சூரணத்தை யுட்கொண்டால் உள் மூலம், வெளி மூலம் சீழ் மூலம், சுக்கில மூலம், இரத்த மூலம், மூலக்கிராணி யென்னும் பலவித வயிற்றுப்போக்குகளும் சர்வமேக உஷ்ணங்களும் சூரியனைக் கண்டபனிபோல் நீங்கும். இதை யுட்கொள்ள வேண்டிய விபரங்களை மருந்துடனனுப்பும் டயரெக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 11 நாளைக்குரியசூரணம் விலை | ரூ | 1 | 0 | 0 |
| 22 நாளைக்குரியது | ரூ | 2 | 0 | 0 |
| 45 நாளைக்குரியது | ரூ | 4 | 0 | 0 |

வி. பி சார்ஜ் பிரத்தேகம்.

## சயரோக நிவாரணிச்சூரணம்.

இம்மருந்தானது நமது முன்னோர்களாற் கண்டுபிடித்துக் கையாண்டுவந்தது, அனுபவசித்தியும்பெற்றது.

இதையுட்கொண்டால் சரீரத்திலுள்ள சர்வநரம்புகளிலும் இரத்தம் பரவித்தேகத்தைப்போஷித்துக் கைகால்களிலுள்ள அயர்வைப் போக்கி யிராஜகருவியான மூளைக்கு நல்லவலுவையும் பசித்தீவரத்தையுங்கொடுத்து அடிக்கடி புகைமுட்டுதலுடன்வரும் இருமல், நித்திரை வராமலுண்டாகும் இருமல், சயனித்தவுடனுண்டாகும் இருமல், நடக்கும்போதுண்டாகும் திகைப்பு, இவைகளை நிவர்த்திசெய்து உடம்பிலுள்ள சோம்பலையும் அயர்வையும்போக்கிச் சந்தோஷிக்கச்செய்யும்,

தவிரவும் க்ஷயம், வாதகாசம், பித்தகாசம், சிலேஷ்மகாசம். இரத்தகாசம், சுவாசகாசம், மந்தாரகாசம், முதலிய கொடியரோகங்களையும் நீக்கிச்சுகத்தைக்கொடுக்கும்.

இதைச் சாப்பிட்வேண்டிய விபரங்களெல்லாம் டயரெக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 11 நாள் மருந்து | ரூ | 1 | 4 | 0 |
| 22 நாள் மருந்து | ரூ | 2 | 8 | 0 |
| 45 நாள் மருந்து | ரூ | 5 | 0 | 0 |

வி, பி, சார்ஜ் பிரத்தேகம்

## தலைவலிச் சூரணம்.

இந்தச்சூரணத்தைமூக்குத்தூளுக்குப்பதிலாக உபயோகித்துவந்தால் ஒருத் தலைவலி இருபக்கம் தலைவலி மூக்கடைப்பு ஜல தோஷம் தலை பாரம் நாசியில் நீர் வடிதல் பீனிசம் இரத்த பீனிசம் சிறுப்பீனிசம் முதலான வியாதிகள் நிவர்த்தியாகும் புகையிலைப் பொடியையுபயோகிப்பவர்கள் மேற்கண்ட வியாதிகளுக்காகஇந்தச் சூரணத்தை பிரயோகித்ததின் பேரில் மறுபடியும் புகையிலைப்பொடியை விரும்பவேமாட்டார்களென்பது நிச்சயம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு அவுன்ஸ் டப்பியின் விலை | ரூ | 0 | 6 | 0 |

வி, பி, சார்ஜ்பிரத்தேகம்.

## நீரிழிவு ரோகநிவாரணிச் சூரணம்.

இந்த வியாதியானது எல்லா நோய்களினும் மிகக் கொடுமையனது இது 21 விதமுள்ளவை அதில்,

1 தேன்போல் கெட்டியாகவும் தித்திப்பாகவும் நீரிறங்குதல்.

2 நீர் இறங்கிய விடங்களில் கற்பாறை போல் கெட்டியாயிருத்தல்.

3 வெண்மையான நரம்புக் கம்பியைப்போல் நீர் இறங்குதல்.

4 சதை மாமிசம் போல் நீர் யிறங்குதல்.

5 நெய்யைப் போலும் எண்ணெயைப்போலும் நீர் யிறங்குதல்.

6 நீரில் நல்லெண்ணெயை யூற்றியவுடன் குபீரெனப் பொங்குதல்.

இந்த ஆறுவிதமான நீரிழிவும் எந்தமருந்துகளையுட் கொண்ட போதிலும் சௌக்கியமாகவே மாட்டாது. இவைகளைத்தவிர மற்றவெவ்விதமான நீரிழிவு வியாதியாயிருந்த போதிலும் நம்மிடத்திலுள்ள சூரணத்தை டயரெக்ஷனிற் கூறப்பட்டிருக்கிற அனுப்பான முறைப்படியுட் கொள்வார்களாகில் மேற்கண்ட நீரிழிவு, பெருமூத்திரம், சொட்டு மூத்திரம் விழுதல், அதிக தாகமாயிருத்தல் முதலான சகல நீரிழிவுகளும் நீங்கிச் சௌக்யமாகுமென்பது திண்ணம் உண்மையும் அனுபவ சித்தியும் பெற்றது. இதைவிட வேறுமருந்து மேற்கண்ட வியாதிக்குக் கிடையாதெனவுறுதியுங் கூறுகிறோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 11 நாள் மருந்து விலை | ரூ | 2 | 8 | 0 |
| 22 நாள் மருந்து விலை | ரூ | 5 | 0 | 0 |
| 45 நாள் மருந்து விலை | ரூ | 10 | 0 | 0 |

வி, பி, சார்ஜ் பிரத்தேகம்.

## குன்மச் சூரணம்.

இதை உபயோகித்தால் வயிற்றில் உண்டாகும் எட்டு விதமானகுன்ம வலியையும் சாப்பிட்டவுடன்வரும் வலியையும் வாந்தி செய்வதையும் ஆகாரம் ஜீரணஸ்தியாகிற காலத்தில் வரும் வலியையும் என்னேரமும் வந்துகொண்டிருக்கிற வலியையும் மாற்றிச் சௌக்கியத்தைக் கொடுக்கும். சாப்பிடவேண்டியவிபரம் டயரெக்ஷனில்சொல்லப்பட்டிருக்கின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| 11 நாள் மருந்தின் கிரயம் | ரூ | 2 | 0 | 0 |

வி, பி. சார்ஜ் பிரத்தேகம்.

## மஞ்சள் காமாலைக்குச் சூரணம்.

இந்தச் சூரணம் அனேக மூலிகைகளைகொண்டு செய்யப்பட்டது இதை யுட்கொள் வார்களாகில் மஞ்சகக்காமாலையால் இரத்தம் குன்றி தேகம் வெளுத்தும் கண் மஞ்சள் நிறமாகியும் நாளுக்குநாள் பசித்தாக மின்றி மெலிவடைவதையுமாற்றி நல்ல இரத்தவிருத்தியையும் பசித்தீ வரத்தையுங் கொடுத்து தேகத்திற்கு வலுவையும் ஆரோக்கியத்தை யும் புஷ்டியையுங் கொடுக்கும். இந்தச்சூரணத்தைச் சாப்பிடவேண் டிய விபரங்களெல்லாம் டயரெக்ஷனில் சொல்லப்பட்டிருக்கின்றது.

11 நாள்சூரணம் விலை ரூ 1 0 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## நரைமயிரைக் கருப்பாக்கும் நற்பௌடர்.

இஃதோர் விசித்திரமான பௌடர் இதை நரைமயிருள்ள இடங் களில் உபயோகித்தால்இரண்டுமணி நேரத்திற்குள்ளாக எவ்வளவு வெண்மையான உரோமமாயிருந்த போதிலும் அந்நிறமுழுவதையு மாற்றிக்கருவண்டையொத்த நிறமாக்குமென்பதிற் சந்தேகிக்கவேண் டாம். தொண்ணூறுவயதுசென்ற விருத்தாப்பியராயிருந்தபோதிலும் பதினாறுவயது பாலியரைப்போல தோற்றுவார்கள். உபயோகப்படுத் தவேண்டிய விபரங்களை மருந்துடனனுப்பும் டயரெக்ஷனில் சொல்லி யிருக்கிறோம்.

ஒருஅவுன்ஸ் பாட்டல் விலை ரூ 0 6 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## பரிமளமிகுந்த பல் பௌடர்.

இந்தப்பௌடரை பிரதிதினம் தந்தசுத்தி செய்துவந்தால் வாய் நாற்றத்தை மாற்றிச் சுகந்த வாசனையைக் கொடுப்பதுமல்லாமல் பல் ஒளிவு முகவசீகரமுமுண்டாகி எயிர்கட்டுதல் இரத்தம் வருதல் சீழ் வருதல் பல் ஜிலுஜிலுப்பு பல் கூச்சம் பல் வலி தந்தவாய்வு தந்தசூலை எயிர் வளருதல் இவைகளை நீக்கிச் சுகத்தைக்கொடுக்கும். இதனால் பற்கள் நிறமாறிக் கருப்பாகமாட்டாது.

ஒருடப்பாவின் விலை ரூ 0 4 0

வி. பி. சார்ஜ்பிரத்தேகம்.

## சுகந்தஸ்நானப்பௌடர்.

இந்தப்பௌடரைத் தேகத்தில் தேய்த்து ஸ்நானஞ்செய்துவந்தால் உஷ்ணத்தைமாற்றிக் குளிர்ச்சியையும் சுகந்த வாசனையையுங் கொடுக்கும்.

ஒருடப்பாவின் விலை ரூ 0 6 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## புளிப்புமாதுளை அறுசுவை லேகியம்.

இந்த லேகியத்தைக் காலைமாலை இரண்டுவேளையும் 11 நாள் உட்கொண்டால் எந்தவிதத்தினாலும் உண்டாகிய ஆரோசியத்தையும் மயக்கத்தையுமகற்றி உமட்டுதலையும் ஒக்காளத்தையும் வாந்தியையும் போக்கி வயற்றிலுண்டாகும் எவ்விதமான இரைச்சல் உப்பிசத்தையும் நீக்கிப் பசியையுண்டாக்கி யாகாரத்தைத் தாராளமா யுட்கொள்ளச்செய்யும். இதையருந்தவேண்டிய விபரங்களை மருந்துடனனுப்பும் டயரெக்ஷனில் சொல்லப்பட்டிருக்கின்றன.

11 நாள் சாப்பிடக்கூடிய லேகியம்விலை ரூ 1 4 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்

## பருத்திவிரை அல்வா.

இஃதொரு விசித்திரமான அல்வா. இதையுட்கொண்டால் வாதநீர் சம்மந்தத்தால் தேகம்பெருத்து நடக்கச் சக்தியற்றிருப்பவர்களை வரட்சியுடம்பைப் போலாக்கும். பித்தநீர் சம்மந்தத்தால் தேகமெலிவடைந்துவரக் கணையால் நெஞ்சுலர்ந்து போவதைப்போக்கி இரத்தவிர்த்தியையுண்டாக்கி அதிக புஷ்டியைக் கொடுக்கும். சரீரத்திலுண்டாகிய உஷ்ணத்தைமாற்றித் திடகாத்திரத்தையுங் கொடுக்கும். வரக்கணையால்நெஞ்சுலர்ந்து கருதுபோலுள்ளவர்களைச்செக்குபோலாக்கும் மற்றவிபரங்களை டயரெக்ஷனிற் கூறப்பட்டிருக்கின்றது.

ஒருசேர் அல்வா விலை ரூ 3 0 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்

## வாந்திபேதிநிவாரணி மெழுகு.

இதை 3, 4 வயதுடைய குழந்தைகள்முதல்விருத்தாப்பியர்வரையிலுமுள்ள சகலரும் சாப்பிடலாம். இதனல் அஜீரணத்தின் பேரிலாவது மற்ற எவ்விதத்திலாவது உண்டாகும்பேதி உஷ்ணபேதி ரெத்

தபேதி சீதபேதி முதலான சகலபேதிகளும் சௌக்கியமாகும். இதை உபயோகிக்கும் விபரங்களை மருந்துடனனுப்பும் டயரெக்ஷனில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஒருதோலாமெழுகு அடங்கிய டப்பாவிலை ரூ 1 0 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## சகலவிஷ நிவாரண மை.

இந்த மையை டயரெக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் உபயோகப்படுத்துவார்களாகில் எவ்விதமான சர்ப்புகடி விஷங்களும் பூரான் வண்டுகடி முதலான எல்லாவிஷ நீர் சம்மந்தமான ரோகங்களும் தீருமென்பது திண்ணம்.

ஒருடப்பாவின் மை விலை ரூ 1 0 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## ரெண மேகக் களிம்பு.

இந்த அற்புதமாகிய களிம்பிற் கொஞ்சமெடுத்து மேகப்புண்கள் வெகுகாளாய் ஆராத மேகரிணங்கள் குழிப்புண்கள் ஊசிக்கண்ணுள்ள கண்டமாலை பவுந்திரங்கள் சூலைப்புண்கள் எலும்பைப்பற்றிய ரெணங்கள் எலும்புகளைத்தின்னும் அல்லதுகரைத்துக்கொண்டும் புரையோடுகிற எல்லாவித ரிணங்கள் இவைகளின்பேரில் தடவிவந்தால் வெகு ஆச்சரியமாக ஆற்றிச் சௌக்கியஞ்செய்யும்.

ஒருதோலா களிம்பு விலை ரூ 0 8 0

வி. பி. சாரஜ் பிரத்தேகம்

## பாவன மிளகு.

இதனாலுண்டாகுங் குணங்களாவன பசித்தீவரமின்றிப் புளித்த யேப்பமாயிருத்தல் அடிக்கடி கொட்டாவி விடுதல் மலச்சிக்கல் சோம்பல் இவைகளைப்போக்கி ஆகாரங்களை யதிகமாயருந்தச்செய்யும்.

டப்பா 1க்குக்ரயம் ரூ 0 6 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## காலக்கிரம விரோசனி மாத்திரை.

இந்தமாத்திரையைச் சாப்பிட்டுவந்தால் மலச்சிக்கல் மலவரட்சி எப்போதும் வயிற்றில் கோளாராகவேயிருத்தல் முதலியவற்றைப்பறந்

றிய எல்லா வியாதிகளையும் நிவர்த்திசெய்யும் அன்றுடகமலத்தை அப்போதைக்கப்போது கழித்து வயற்றைச் சுத்தியாக்கும். இதையுத்தே சித்தேகாலக்கிரமவிரோசனியென்நாமமும்பெற்றதுஇம்மாத்திரையை யருந்துவதினுல் உஷ்ணுதிக்க முதலிய கெடுதிகள் நேரிடாது. சரீரத்துக்குஆரோக்கியத்தையே கொடுக்கும். இதையுபயோகப்படுத்தும் விபரங்களை மருந்துடனனுப்பும் டயரெக்ஷனில் தெரிவித்திருக்கிறது.

48 மாத்திரைகளடங்கிய டப்பாவின்விலை ரூ 0 12 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## நேத்திரரோக நிவாரணி மாத்திரை.

இந்த மாத்திரையை உபயோகித்து வந்தால் கண்ணில் நீர்வடிதல் சதைபடருதல் இடையில் வகூரி முதலிய கொடிய நோயால்பூவிழுதல் கண் கூசுதல் கண் புகைச்சல் முதலான 96வியாதிகளும் சௌக்கியமாகும். இதைஉபயோகப்படுத்துகிற விபரங்களை டயரெக்ஷன் மூலமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

ஒருடஜன் மாத்திரையின் விலை ரூ 0 12 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## பாரிசவாய்வு நிவாரணி மாத்திரை.

இந்த மாத்திரையானது வாய்வுகளுக்கு ஓர் வைரி. இதைஉபயோகித்து வந்தால் பாரிசவாய்வு அண்டவாய்வு தமரகவாய்வு மூர்ச்சைவாய்வு விரைவீக்கம் வாய்கோணல் வாய் குழரல் நரம்பிலிறங்கும் வாய்வு குடலிலிறங்கும் வாய்வு முதலான அனேகவாய்வுசம்மந்தமான வியாதிகள் தீரும். மூர்ச்சைவாய்வு அண்டவாய்வு தமரகவாய்வு வந்தவர்களுக்கு இதை உபயோகப்படுத்தினுல் 15நிமிஷத்தில் சௌக்கியமடைவார்கள். மற்றவிபரங்களை டயரெக்ஷனில் கூறப்பட்டிருக்கின்றது.

ஒருடஜன் மாத்திரையடங்கியடப்பாவின்விலை ரூ 1 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## பாலர்களுக்கு உறைமிளகுமாத்திரை.

இந்த மாத்திரையில் ஒன்றை யெடுத்து பிள்ளைப்பாலிலாவது தஜலத்திலாவது வெந்நீரிலாவது உறைத்துக் குழந்தைகள் ஸ்நா

ணஞ்செய்தவுடனே உள்ளுக்குக் கொடுத்தால் தோஷம் மாந்தம் வயர் உப்பிசம் கணை முதலியவை நேரிடாதபடி பாதுகாத்து வளர்பிறைச் சந்திரனைப்போற் பரிபாலிக்கும் 3 மாதக்குழந்தைகள்முதல் 2 வயதுக் குழந்தைகள்வரை உபயோகப்படுத்தலாம்.

50 மாத்திரையடங்கிய டப்பாவின் கிரயம் ரூ 0 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்

## தாகவிடாய் மாத்திரை.

கடுமையான வெயிற்காலங்களிலும் அகாலங்களிலும் தண்ணீரை விரும்புஞ் சமயங்களில் இந்தமாத்திரையிலொன்றை யெடுத்து வாயிற்போட்டவுடனுண்டாகும் ரசத்தால் தாகம் பூராத்தீர்ந்து போவதுந்தவிர அதிகஉஷ்ணத்தால் விக்கலுண்டாகித் தாகிப்பதை யும் நாவரட்சியுண்டாவதையுமாற்றித் தேகத்திற்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும். நீரிழிவு வியாதியால் அடிக்கடியுண்டாகும் தாகத்தையும் நீக்கும்.

48 மாத்திரைகளடங்கிய டப்பாவின் கிரயம் ஆ 0 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## பாலர்களுக்கு விரேசன மாத்திரை.

இதை ஸ்திரீகளுடைய பிள்ளைப்பாலிலாவது வெந்நீரிலாவது ஒருமாத்திரையை யுரைத்துக் குழந்தைகளுக்குப் புகட்டினால் வயிற்றிலுள்ள மலச்சிக்கலைப்போக்கி இரண்டுதடவைமட்டும் மலசுத்தியாகும். தேகத்திற்குச் சௌக்கியத்தைக் கொடுக்கும். யாதொருவிதமான கெடுதலும் நேரிடமாட்டாது.

2 டஜன்மாத்திரைகளடங்கிய டப்பாவின்கிரயம் 0 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்

## கணை மாத்திரை.

வயற்றில் போர்மாந்தங்களாலுண்டாகும் பலவிதமான கழிச்சல்களும் குடித்த பால் ஜீர்ணஸ்தியாகாமல் அடிக்கடி வாந்தி மயக்கம் கண்சொருகுதல் முதலான யாவும் டயரெக்ஷனில் சொல்லியபடிகுழந்தைகளுக்குக் கொடுத்தால் ஒருமாத்திரையிலேயே சௌக்கியமுண்டாகும்.

24 மாத்திரைகளடங்கிய டப்பாவின் விலை ரூ 1 0 0

வி. பி சார்ஜ் பிரத்தேகம்.

## காக்கைவலிப்புக்கு அய மாத்திரை.

இந்தமாத்திரையை டயரெக்ஷனிற் கூறியபடி 11 நாள் சாப்பிட்டால் ஷெகாக்கை வலிப்பு காணுமற் பறந்தோடும்.

இதன் விலை ரூபா 1 0 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## கபாட மாத்திரை.

வயற்றளைச்சலால் ஒருமணிநேரத்துக்குள் 40, 50 தடவைவரையிலும் சீதம் ரெத்தம் போய்க்கொண்டிருப்பவர்கள் இந்த மாத்திரையை டயரெக்ஷனில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் உட்கொண்டால் மேற்கண்டவியாதி சௌக்கியமாவதுடனே மூலவாய்வு கிராணிமுதலிய வயிற்றுப் போக்கும்வெகு சீக்கிரத்திற் குணமாகும்.

5 நாள் சாப்பிடக்கூடிய மாத்திரைகளடங்கியடப்பாவிலை 1 0 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## சூலை நிவாரணிக் குளிகை.

மேகசூலை, முதிரிசூலை, வாதசூலை, பித்தசூலை, சிலேட்டுமசூலை. ஆமைசூலை உத்காரசூலை, குன்மசூலை, உலத்திசூலை, நிதம்பசூலை, கரசூலை, சுரசூலை. பக்கசூலை, கெர்ப்பசூலை, தூரசூலை, நரித்தலைச்சூலை, பாதசூலை, வெடிசூலை, முதலான 18 வித சூலைநோய்களும். சிலசூலை நோய்கள் மாலை 6 மணிமுதல் காலை 6 மணிவரை உளைவெடுத்து வேதனையை யுண்டாக்கிக் கொண்டிருக்குஞ் சூலை நோய்களும் இந்தக்குளிகையை டைரக்ஷனிற் கூறியபடி உபயோகப்படுத்தினால் சர்வ ஜாக்கிரதையில் சௌக்கியமாகுமென்பது நிச்சயம்.

5 தினம் சாப்பிடக்கூடிய 9 குளிகையின் விலை ரூ 1 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## மேகஊரல் குளிகை.

உள்ளங்கை உள்ளங்காலிலும் தேகமுழுவதிலும் கருப்பு வெள்ளை நிறமாக வீழ்ந்திருக்கும் ஊரல்களை யிந்தக்குளிகையானது 22 நாளைக்குள் சௌக்கியஞ்செய்து தேகத்தை முன்னிருந்த நிலைமையில் வைத்

துப் பரிசுத்தமாக்கும். இதைச்சாப்பிடும் விபரங்களை மருந்துடனனுப்பும் டயரெக்ஷன் மூலமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

22 நாட்களின் குளிகை டப்பா விலை ரூ 2 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்

## இராஜ சுரக் குளிகை.

இந்தக்குளிகையானது அனேகவிதமான வனமூலிகைகளாற் செய்யப்பட்டது. இதையருந்துவதினால் பித்தசுரம், குளிர்சுரம், விஷசுரம், சீதளசுரம், நளிர் சுரம், அஸ்திசுரம், இருமுறைச்சுரம், மும்முறைச்சுரம், நாலாமுறைச்சுரம், தோஷசுரம், அதிசாரசுரம், மலைச்சுரம், முதலான 64 வித சுரங்களும் தீரும். இதை யெவ்விதசந்தேகத்தையுங் கொள்ளாமற் சாப்பிடலாம். பத்தியம் அனுப்பானமுதலிய விபரங்களை மருந்துடனனுப்பும் டயரெக்ஷனில் சொல்லப்பட்டிருக்கின்றது.

7-குளிகையின் விலை ரூ 1 0 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## சொரி சிரங்கு எண்ணெ.

இந்த எண்ணெயை உபயோகித்துவந்தால் ஆராதரிணங்கள், குழிப்புண்கள், புரையோடுகிற புண்கள், அரிசிரங்குகள், சொரிசிரங்குகள், சிருசிரங்குகள், பெருஞ்சிரங்குகள், மேகப்புண்கள், ஆண்குறியின் வயிரத்திலுண்டாயிருக்கும் ரிணங்கள், யோனிப்புண்கள் யாவும் சௌக்கியமாகும். இதை யுபயோகிக்கும் விபரங்களை டயரெக்ஷனில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஒருஅவுன்ஸ் பாட்டல் எண்ணெ விலை ரூ 0 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## கர்னரோக நிவாரணி எண்ணெ.

காதில் சீழ், தண்ணீர் வருதலுக்கு இந்த எண்ணெயைக் காதில் விட்டு அடைத்தால் சௌக்கியமாகும்.

ஒரு அவுன்ஸ் பாட்டல் விலை ரூ 0 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## முகத்திலும் சரீரத்திலும் உண்டாகும், கருப்புகளுக்கு எண்ணெ.

முகத்திலும், மூக்கிலும், கண்ணைச்சுற்றிலும், தேகத்தின் மற்ற இடங்களிலும் விழும் கருப்புகளின்பேரில் இந்த எண்ணெயை அழுத்தமாகத் தேய்த்து மூன்றுமணி நேரஞ்சென்றதின் பிற்பாடு சோப்பாவது சீயக்காயாவது தேய்த்து சுத்தஜலத்தில் ஸ்நானஞ் செய்துவந்தால் மேற்கண்ட கருப்புகள்மாறி முன்னிருந்த பிரகாசத்தைப்பார்க்கிலும்அதிகமானகாந்தியையும் தேஸசையுங் கொடுத்து மனமகிழ்ச்சியையும் சுகத்தையுங்கொடுக்கும்.

ஒருஅவுன்ஸ் பாட்டல் எண்ணெ விலை ரூ 0 4 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## காது மந்த ரோகத்திற்கு ஸ்நானத் தைலம்.

இந்த எண்ணெயை வாரத்துக்கிரண்டுமுறை ஸ்நானஞ்செய்துவந்தால் காதுமந்தம், காதிரைச்சல், காதுகுத்துதல், சயித்தியம், இடையில்மந்தமாகிக் காதுகேளாதிருத்தல், முதலியசகலவியாதிகளும் நிவர்த்தியாகும். ஸ்நானஞ் செய்யவேண்டிய முறைகளையும்பத்தியபாகங்களையும் தைலத்துடனனுப்பும் டயரெக்ஷனில் விபரமாய்க் கூறப்பட்டிருக்கின்றது.

5 முறை ஸ்நானஞ்செய்யக்கூடிய தைலத்தின்விலை 1 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்,

## நேத்திர ரோகத் தைலம்.

இந்தத்தைலத்தை வாரத்துக்கிரண்டுமுறை ஸ்நானஞ்செய்துவந்தால் கண் மங்கலாயிருத்தல் கண்ணில் நீர்வடிதல் கண்கூசுதல் கண்ணிற் பீளைசாடுதல் கண்ணிற் சதைபடருதல் தூரதிருஷ்டியில்லாதிருத்தல் கண்ணெரிவு முதலான நேத்திரரோகங்கள்யாவுந் தீரும். 5-முறை ஸ்நானஞ்செய்வதனாலேயே ஷை தைலத்தின் குணத்தை நன்

பர்கள் தெரிந்து கொள்ளக்கூடும். இதை யுபயோகப்படுத்தும் விபரங்களெல்லாம் டயரெக்ஷன் மூலமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

5 ஸ்நானத்திற்குரிய தைலத்தின் கிரயம் ரூ 2 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## தலை வலித் தைலம்,

இந்தத்தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானஞ் செய்துவந்தால் நாசியில் நீர்வடிதல் நீரானது சளிபோல் திரண்டு என்னேரமும் சளி வந்துகொண்டிருக்கும் வாத பீனிசம் இரத்தப் பீனிசம் சிலேப்பீனிசம் சிறுப்பீனிசம் நாசியில் புலால்நாற்றத்துடன் ஓர்வித மஞ்சள் நிறமாய்வரும்பித்தபீனிசம் கண்களில் பீளையுண்டாகுதல்நாசியிற் குத்துதல் நாசிமாறிமாறியடைக்குதல் சிலேத்மபீனிசம் என்னேரமும் தும்மலுடன் தலைவலியுண்டாகுதல் தலை பாரமாயிருத்தல் ஒற்றைத்தலைவலி இருபக்கம் தலைவலி முதலான உபத்திரவங்கள் யாவும் சௌக்கியமாகும். இதைஸ்நானஞ் செய்துவருங் காலத்தில் நடந்து கொள்ளவேண்டிய முறைகளை டயரெக்ஷனிற்.கூறப்பட்டிருக்கின்றது.

5 ஸ்நானத்திற்குரிய தைலத்தின் கிரயம் ரூ 2 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## குளிதாமரைத் தைலம்.

இதை வாரம் இருமுறை ஸ்நானஞ் செய்துவந்தால் கை கால் கண்கள் எரிச்சலாயிருத்தல் தலைமயிர் உதிர்தல் தேகவரட்சி தேக அயர்வாயிருத்தல் மூளையிற் கொதிப்புண்டாகியிருத்தல் உஷ்ணதிக்க முதலான சகலமும் சௌக்கியமாகும். மற்றவிபரங்களை டயரெக்ஷன் மூலமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

5 ஸ்நானத்திற்குரிய தைலம் விலை ரூ 1 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## சர்வ தேள்விஷ சங்காரித் தைலம்.

கருந்தேள் செந்தேள் சிறுதேள் புல்லுத்தேள் கட்டுவக்காலிமுதலிய தேள்கள் கொட்டியவுடனே அவஸ்தையடைவதை நண்பர்கள் தெரிந்திருக்கலாம்.

மேற்கண்ட தேள்கள், கொட்டியவுடனே இந்தத் தைலத்தைக் கோழியிறகு முதலியவற்றாலெடுத்துக் கொட்டுவாயில் 1, 2 துளிவிட்டால் அந்தநிமிஷம் வரை அழுகுரலா யிருந்தவர்கள் அதைவிட்டுப் புன்சிரிப்புடன் மனமகிழ்ச்சி யடைவார்கள். இஃதோர் அற்புதமான ஔஷதமாகையால் எல்லாக்குடும்பங்களிலு மிருக்கவேண்டியது முக்கியம். கைவிரலினால் இந்தத்தைலத்தையுபயோகிப்பதுகூடாது.

ஒருஅவுன்ஸ் பாட்டல் தைலம் விலை ரூ 0 8 0

வி. பி. சார்ஜு பிரத்தேகம்.

## பித்தவிரிவுத் தைலம்.

பாதம், குதிகால், உள்ளங்கை முதலான விடங்களிலுண்டாகும் பித்தவிரிவுக்கு இந்தத்தைலத்தைத் தடவிவந்தால் ஷை பித்தவிரிவுகள் மாறி வேதனையையுங் கண்டிக்கும்.

கால்அவுன்ஸ் பாட்டல் தைலம் விலை ரூ 0 4 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்

## கற்றாழை நாற்றம் போக்கும் வில்லை.

நித்திய ஸ்நானஞ் செய்யும்போது இந்தவில்லையில் ஒன்றையெடுத்துத் தேகத்தில் தேய்த்து 11நாள்வரையிலும் ஸ்நானஞ்செய்து வந்தால் வெயர்வை நாற்றம் சுற்றாழைநாற்றம் முதலான துற்கந்தங்களைப்போக்கித் தேக ஆரோக்கியத்தையும் ரமணீகரமான வாசனையையும் கொடுக்கும்.

11வில்லைகளடங்கியடப்பாவிலை ரூ 1 0 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## தேமல் வில்லை.

இந்த வில்லையை சுத்தஜலத்திலாவது பன்னீரிலாவது கரைத்துத் தேகத்தின் தேமல்களுள்ள விடத்திற் றேய்த்து ஒருமணி நேரஞ்சென்றதின்பிற்பாடு ஸ்நானஞ்செய்தால் அரிதேமல் சொரிதேமல் அழுக்குத்தேமல் முதலான சகலதேமல்களையும் 7தினத்தில் மாற்றி முன்னிருந்த தேகம்போற் செய்யும்.

7வில்லைகளின்கிரயம் ரூ 0 8 0

வி. பி. சாரஜ் பிரத்தேகம்.

## தாமரைப்பூ ஷர்பத்.

இதை காலை மத்தியானம் மாலை மூன்று வேளையும் 11 நாள்பரியந்தம்உட்கொண்டால் தாகவரட்சியை நீக்கித் தேகத்தி லுண்டான மூலச்சூட்டைமாற்றிச் சரீர சௌக்கியத்தையும் உற்சாகத்தையுங் கொடுக்கும்.

இதை முக்கியமாய் ஸ்திரீ சம்போகமானவுடன் டயரெக்ஷனில் கூறியபடி யுபயோகப்படுத்தி அதினால் உண்டாகும் நன்மைகளைப்பற்றி நண்பர்களனுப்பும் சொர்ட்டிபிக்கெட்டுகளை யெதிர்பார்க்கிறோம்.

பெரியபாட்டல் 1க்குக் கிரயம் ரூ 1 4 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## படர் மேகசங்காரி வெண்ணை.

இந்த வெண்ணையைத் தினந்தோறும் நித்திரைசெய்யப் போகும் போது உபயோகித்து மறுநாள் காலையில் சோப்புப்போட்டுத் தேய்த்துஸ்நானஞ் செய்துவந்தால் தேகத்தில் எவ்வித காரணத்தினாலுமுண்டாகிய படர்தாமரை மேகப்பத்து நமைச்சல் சொரி இவைகள் நிவர்த்தியாகும். இவ்விதமாக 11 நாள் உபயோகித்து வந்தால் மேற்கண்ட ரோகங்கள் யாவும் பஞ்சுபோற் பறந்தோடும்.

ஒருதோலா வெண்ணையடங்கியடப்பா ரூ 0 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## சயரோக நிவாரணிக்குச் செம்முள்ளித் தைலம்.

இந்தத் தைலத்தை சயரோகநிவாரணிச் சூரணஞ் சாப்பிட்டு வருங்காலத்தில் வாரத்துக்கிரண்டுதபா ஸ்நானஞ்செய்துவந்தால் சயம் வாதகாசம் பித்தகாசம் சிலேஷ்மகாசம் இரத்தகாசம் சுவாசகாசம் மந்தாரகாசம் முதலானதைப் போக்கி இரத்தவிர்த்தி மூளைச்சு வலிவு பசித்தீவரம் தேகஆரோக்கிய முதலியதைக்கொடுத்து அடிக்கடிபுகை முட்டுதலுடன்வரும் இருமல் நித்திரைவராமலுண்டாகும் இருமல் சயனித்தவுடனுண்டாகும் இருமல் நடக்கும்போதுண்டாகும் திகைப்

பையும் போக்கும். இதின் பத்திய விபரங்களை டயரெக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது.

பெரியபாட்டல் 1க்கு விலை ரூ 2 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

# கெந்தாப்பிரோஜாத் தைலம்.

இந்தத்தைலத்தை யுட்கொள்வதால் பலவிதரோய்களில் மெலிந்துபோயிருக்கிறசரீரத்திற்கு இரத்தவிர்த்தியை யுண்டாக்கித் தேகபுஷ்டி யைக்கொடுக்கும் அன்னதுவேஷமுண்டாயிருப்பதையும்அரோசிகத்தையுமாற்றிப் பசித்தீவரத்தையுங் கொடுத்து அகாலங்களிலும் அடிக்கடி மலபாதை நேரிடுவதையுமகற்றும். இம்மருந்து மேற்கண்ட குணதோஷங்களை நீக்குவதில் ஓர் வைரியென்றே சொல்லலாம். இதையருந்தவேண்டிய அனுப்பான முறைகளையும் பத்திய விபரங்களையும் தைலத்துடனனுப்பும் டயரக்ஷன் மூலமாய்ச் செவ்வையாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இதை 45 நாள் உபயோகப்படுத்த வேண்டியிருந்தாலும் 11 நாளிலேயே குணந்தெரியும்.

அரை அவுன்ஸ்பாட்டல் விலை ரூ 5 0 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

# மனோரஞ்சிதத் தைலம்.

இந்தத்தைலத்தை வாரத்துக்கிரண்டு முறையாக ஒரு மண்டலம் ஸ்நானஞ்செய்து வந்தால் இராஜகருவிகளான நரம்புகள் பெலப்படும் மூளைக் கொதிப்பை மாற்றிப் புத்திகூர்மையையும் ஞாபக சக்தியையுங் கொடுக்கும். அதிகதொலையுள்ள நுட்பமான வஸ்துக்களைப் பார்க்கக்கூடிய விதமாய்க் கண்களுக்குக் குளிர்ச்சியையும் தெளிவையுங் கொடுக்கும் மெதுவாகப் பிரயோகஞ் செய்யும் வார்த்தைகளைக் காதுக்குள்தாராளமாய்ப் புகச்செய்யும். தேகம் சிகப்பு நிறமாகவும் தேஜஸாகவுமிருக்கும். கை, கால், முழங்தாள், இடுப்பு முதலியஇடங்களிலுண்டாகும் வலியைப் போக்கித் தைரியத்தையும் வீரிய விர்த்தியையும் உண்டாக்கும். தேகத்திலுள்ள மாசுகள் படைகள் சொறிகள் கற்றாளை நாற்றம் இவைகளையகற்றும். தலைமயிர் உதிர்தலையும் நுனியில் பிளவு உண்டாவதையும் போக்கும். சரீரசௌக்கியத்தையும் குளிர்ச்சி

யையும் பரிமள வாசனையையுங் கொடுக்கும். கெட்ட இரத்தத்தை நீக்கி சுத்தமான இரத்தத்தைத் தேசத்திற் பரவச்செய்யும். ஸ்திரீபுருஷர்கள் தினந்தோறும் உச்சியில் தினே தினே தேய்த்து ஸ்நானஞ்செய்து வரும் பக்ஷத்தில் அன்றுடகம் ஏற்படக்கூடிய உஷ்ணத்தை யடியோடேயகற்றும். இதற்கு யாதொருபத்தியமுமில்லை.

45 நாளைக்குரிய தைலத்தின் விலை ரூ 2 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## மருந்தூடு வெளியேற்றுங் குளிகை.

ஸ்திரீபுருஷர்கள் பிரயோகித்த ஈடுமருந்தினால் அன்னதுவேஷம் பசியின்மை வயற்றுப்பொருமல் வயற்றுவலி தேகஅயர்வு அனேக மருந்துகளைச் சாப்பிட்டும் சௌக்கியமாகாமல் தேகவரட்சியுடன் கண் உதடு உள்ளங்கை உள்ளங்கால் இவைகளில் இரத்தவிர்த்தியில்லாமல் வெளுப்பாயிருத்தல் முதலிய துற்குணங்களை மேற்கண்ட குளிகையை ஒருவேளை சாப்பிட்ட வுடனேபோக்கித் தேகத்தில்இரத்தவிர்த்தியையும் பசித்தீவரத்தையும் சரீர புஷ்டியையுஞ் சௌக்கியத்தையும் கொடுக்கும். மருந்துடனனுப்பும் டயரெக்ஷனில் பத்தியமுறைகளியாவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஒரு குளிகையின் விலை ரூ 0 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## எரிகும்ப வாய்வுக்கும் ஈரல் வலிக்கும் குளிகை.

நெஞ்சிலும் வயற்றிலும் எரிவுண்டாகி வாந்தி யெடுத்தல் ஈரல் சுருண்டு வலியுண்டாகுதல் முதலான வியாதிகள் மேற்கண்ட குளிகையை டயரெக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் உட்கொண்டால் சௌக்கியமாகும்.

5 வேளை சாப்பிடக்கூடிய குளிகையின் விலை ரூ 1 8 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

# நரம்புச் சிலந்தியைப் போக்கும் நவநீத மெழுகு.

இதை நரம்புச்சிலந்தியுள்ள விடத்தில் பூசி 24 மணிநேரம்வரையில் அழிந்துபோகாமல் பாதுகாப்புடனிருந்தால் அதிலுள்ள கெட்டநீரும் ஓர்விதமான வெள்ளைப்புழுவும் வெளியெறிச் சௌக்கியமாவது வெகு ஆச்சரியத்தைக் கொடுக்கும். மேற்கண்ட மெழுகை முன்சொல்லியபடி மூன்றுதடவை யுபயோகிக்க வேண்டியது.

மூன்றுவேளை மருந்தின் கிரயம் ரூ 0 12 0

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

# எண்ணெ ஸ்நான வில்லை.

பெரும்பாலும் நமது நாட்டில் நல்லெண்ணையைத் தலைக்குத்தேய்த்து ஸ்நானஞ்செய்வது சகஜமாயிருக்கிறது. அப்படிச்செய்வதிற் பிரயோஜனமில்லை யென்பது வைத்தியகிரந்த கர்த்தாக்களுடைய சித்தாந்தம். அஃதாவது நல்லெண்ணெ ஸ்நானம் எட்டுமுறைசெய்தால் ஒரு தைல ஸ்நானத்திற்குச் சமானமாகும் மேற்கண்டவில்லையை கீழேகண்டவிபரப்படி ஸ்நானஞ் செய்துவந்தால் ஷை தைலஸ்நானத்தை யொத்திருக்கும். ஆகையால் நண்பர்களே, நீங்கள் நல்லெண்ணெ தேய்த்துக்கொள்ளப் பிரயத்தனப்படுங்காலத்தில் போதுமான யெண்ணெயையொரு இருப்புக்கரண்டியிலாவது சட்டியிலாவது விட்டு ஷை வில்லையில் ஒன்றைத் தூள்செய்து போட்டுக் காய்ச்சும்போது பொங்கும், அந்தக்ஷணமே கீழேயிறக்கிச் சூடுஆறிய பின்புதலைபிலிட்டு ஒரே வெந்நீரில் சீயக்காய் தேய்த்து ஸ்நானஞ் செய் துவந்தால், தீராத தலைவலி, கண்ணில் நீர்வடிதல், கண்புகைச்சல், கண்ணெரிவு, தூரதிருஷ்டி யில்லாதிருத்தல், பித்தமயக்கம், கிருகிருப்பு, தேக அயர்வு முதலிய யாவும் சௌக்கியமாவது மல்லாமல் தேக ஆரோக்கியமும் சுகந்தவாசனையும் முகவசீகரமுமுண்டாகும். ஐந்து ஸ்நானத்திலேயே குணங்தெரியும்.

வில்லை 1க்குக் கிரையம் ரூ 0 0 6

வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

## உருப்பி மூலத்திற்குச் சூரணம்.

இந்த நோயானது சிறுவர் முதல் முதிர்ந்தவயதுவரையுள்ள முத்தேகவாசிகளுக்கும் உண்டாவது வழக்கம். இவ்வியாதி யுள்ளவர்களுக்கு மலம் இறுகியும் இரத்தம் விழுந்துகொண் டிருப்பதுடனே உருப்பியானது உலக்கைப் பூண்போல வெளியே தள்ளி மறுபடியும் உள்ளே செல்லும். இந்த அசிங்கிதையான வியாதிக்கு மேற்கண்ட சூரணத்தை டயரொக்ஷனில் கூறியபடி 11 நாள் உபயோகப்படுத்தினுல்சௌக்கியமாகும்.

11 நாள் சாப்பிடக்கூடிய சூரணம் விலை ரூ 1 0 0
வி. பி. சார்ஜ் பிரத்தேகம்.

கே. வி. கோவிந்தசாமி அன்கோ,
ஜோஸியம் வைத்தியம்
மேலச்சித்திரைவீதி,
மதுரை.

சிவமயம்.

# முக்கியகவனிப்பு.

1. மருந்து வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதித் தருவித்துக்கொள்ள வேண்டியது.

2. கடிதமூலமாய் மருந்து வேணுமென்றனுப்பும் வியாதியஸ்தர்களின் இரகசியமான கடிதத்தை வெகுஜாக்கிரதையாயும் பந்தோபஸ்தாயும் வைத்திருந்து பின்னீடு பரிகரிக்கலாகும். அதனால் நண்பர்கள் தாராளமாகத் தங்கள் தங்கள் வியாதிகளின் மர்மத்தை யெழுதியனுப்ப எள்ளளவும் யோஜிக்க வேண்டியதில்லை

3. மருந்துகளை வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ள விரும்புவோர்மேலே சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் மருந்துக்கிரயத்தில் பாதியை முன் பணமாக அனுப்ப வேண்டும். ஒரு ரூபாய்க்குட்பட்ட மருந்துக் கிரயத்தையும் மேற்கண்ட பாதித்தொகையையும் போஸ்ட்செலவையும் போஸ்ட் லேபிளாகவாவது மணியார்டர் மூலமாயாவது அனுப்பிவிக்க வேண்டியது. ஒருரூபாய்க்குக்குறைந்த தொகையுள்ள மருந்துகளை வி. பி. மூலமா யனுப்பப்படமாட்டாது.

4. வெளியூர் ஆர்டர்களுக்கு உடனேக்குடனே ஜவாப் அனுப்பலாகும்.

5. மருந்து சாப்பிட வேண்டிய அளவும் அதற்குள்ள பத்திய விபரங்களும் மருந்துட னனுப்பும் டயரெக்ஷன் மூலமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

6. ஆரூடம் ஜோதிடம் வைத்தியம் விஷயமாய் விபரந்தெரிய வேண்டி யிருந்தால் தபால் மூலம் அரையணா ஸ்டாம்பு அனுப்பினல் விபரமாய் ஜவாப்செய்யலாகும்.

7. இதில் சொல்லப்படாத வியாதிகளுக்கு மருந்து வேண்டி யிருந்து தெரிவித்தால் அதற்குரிய செலவு தொகையைக் கொடுப்ப பக்ஷத்தில் அப்போதைக் கப்போது மருந்துகள் தயார் செய்து கொடுக்கவும் அயலூர்களுக்குத் தருந்தபடி கொடுத்தால் நேரில் வந்து பார்க்கவுந் தயாரா யிருக்கிறோம்.

விலாசம்.

**கெ. வி. கோவிந்தசாமி அன் கோ,**

ஜோஸியம் வைத்தியம்,

மேலச்சித்திரைவீதி மதுரை.

உ

**சிவமயம்.**

குமரன் துணை

இதனால் சகலமான கனதனவான் முதலிய நண்பர்களுக்குத் தெரிவிப்பது யாதெனில்.

நாம் இந்தக் கேட்லாக்கில் சொல்லியிருக்கிற பிரகாரம் வைத்திய ஜோதிட சாஸ்திரங்களை கூடியவரைக்கற்றுணர்ந்து, அததற்குத்தகுந்த ஔஷதப் பிரயோகங்களையும், கிரகநிலைகளுக்குத்தக்க பரிகாரங்கள் செய்யவேண்டிய முறைகளையும் நமக்குத் தெரிந்தமட்டிற் செய்யக் கூடியதா யிருந்தபோதிலும், முக்கியமாய் நாம் கொண்ட கருத்தானது சித்தாதிகள்முதலான ஆன்றோர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்ற பிரகாரம், உலகத்திலுள்ள ஸ்திரீ புருஷாள் இருபாலரும் அனுஷ்டிக்க வேண்டிய சில முக்கிய விஷயங்களைப் போதித்து, அதைஊர்ஜிதத்துக்குக் கொண்டுவர வேணுமென்ற பொதுநன்மையைக் கருதியே இதனடியிற் கண்ட விதிகளைக்கூறலானோம்.

அஃதானது மேற்சொல்லிய ஆன்றோர் வாக்கிய மாகையால் ஹே நண்பர்காள், இதைக் கொஞ்சமும் நிக்கிரகஞ் செய்யாமல், தங்கள் தங்களாலியன்ற வரையிற் பாதுகாத்துவரும் பக்ஷத்தில், அவர்களுக்கு ஈஸ்பர கடாக்ஷமுண்டாகி, யிகபரசாதகத்திற் கொற்றுமையாக, ஆயுள்விர்த்தி, சந்தானவிர்த்தி, செல்வமகிழ்ச்சி, பிணியின்மை முதலான நற்பயனைப் பயக்கு மென்பது நிச்சயம். ஒரு மனிதனுக்கு ஈஸ்பர கிருபை கிட்டுவதென்றால் சாமான்யமல்ல; எப்பொழுதும் அவருக்கு வந்தனை வழிபாடுகளைப் புரிந்து, திடவைராக்கிய சித்தத்தோடும் ஓர்மையாகவும் தியானித்தாலொழியக் கிடைப்பது அருமையல்லவா? தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றலரிதென, வாக்கியம் ஏற்பட்டிருப்பதும் இதனாலன்றோ?

ஆதலால் நமது நண்பர்கள் யாவருந் தயைசெய்து, அடியில் விபரித்திருக்கின்ற விதிகளை வழுவாது, கூடியவ்வரை யனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவார்களாகில், அவர்களுக்கு ஈஸ்பரகிருபை, தேகப்பாதுகாப்பு முதலிய நல்ல சுகத்தை யடைவார்களென வற்புறுத்திச்சொல்லலானோம்.

ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள ஸ்திரீ புருஷாள் இருபாலரும் அனுஷ்டிக்கவேண்டிய முக்கிய விதிகளாவன.

அதிகாலையில் நித்திரையினின்றும் எழுந்தவுடன் தாமரைப்புஷ்பம், தங்கம், தீபம், கண்ணாடி, சூரியன், அக்கினி, கடல், வயல், சிவலிங்கம், மலை, கன்றையுடைய பசு, தன்னுடை வலக்கை, மனைவி, மிருதங்கம் இவைகளில் விழிக்கவேண்டியது முக்கியமெனினும் சாமான்யமாக வலதுகையையும் கண்ணாடியையும் பார்க்கக் கூடியதுமிகவும் எளிதான விஷயமாதலால் அவைகளிரண்டி லொன்றிலாவது கட்டாயம் விழிக்கவேண்டியது முக்கியமாம்.

அப்பால் மலமூத்திரங் கழித்துக் கல், மணல், கரி, பாளை, வைக்கோல் இவைகளை நீக்கி மற்றவைகளைக் கொண்டு பல்துலக்கி சுத்தஜலம் அல்லது நீராகாரத்தை யவரவர்களுக்கு ஏற்பட்ட வழக்கம் போல் அருந்துவதற்கு இரட்டிப்பாக அருந்தி, ஒரு பர்லாங்குக்குக் குறையாமல் உலாவியும், நடந்தும், வியர்வை யுண்டானவுடன் உலாவி நடப்பதை விட்டு, அயர்வும் வியர்வையும் நீங்கியபின்பு சுத்தஜலத்தில் ஸ்நானஞ் செய்து, வழக்கம்போல ஜெப தபங்களை முடித்துக்கொண்டுகடவுளைத் தியானிக்கவேண்டியது. தைலஸ்நானத்திற்கு மாத்திரம் வென்னீரை யுபயோகப்படுத்த வேண்டியது; நோயுள்ளவர்கள் ஸ்நானபான மெல்லாம் வென்னீரே. குளிர்ந்தஜலஸ்நானத்தினுல்பற்பலதேசங்களிலுள்ள தண்ணீர் தேகத்திற்கு ஒற்றுமையாயிருக்கு மென்பதும், சரீரம் திடகாத்திரமேற்படுமென்பதும் அனுபவ சித்தாந்தம்

மேற்சொல்லிய இருபாலரும் முக்கியமாய் கோதுமையைச் சமையல்செய்து சாப்பிடுவதே அவசியமென்றும், தீராப்பட்சம் பச்சையரிசியைப் பக்குவஞ் செய்து கொள்ளலாமென்றும், புழுக்கின அரிசியிற் சத்தில்லாததால் அவ்வளவு சிலாக்கிதை யில்லையென்றும் ஆன்றோர் வாக்கிய மிருப்பதால் இந்நாட்டி லுள்ளோர் பச்சை யரிசியையே யுபயோகிப்பது நன்மையாம்.

இதனடியிற்கண்ட பதார்த்தங்களை புருஷர்கள் உடயோகப்படுத்தினுல் சரீரத்தில் இரத்தம் பரவி தாதுவிர்த்தி முதலான நற்குணங்களைப் பயக்குமென முது நூன்மொழி கூறுவதால், அவைகளை யனுஷ்டிப்பதேமுறை அஃது யாதெனில்;

துவரைப்பருப்பு, வாதாம்பருப்பு, சாரப்பருப்பு, உளுந்து, கடலை, மொச்சை, பச்சைப்பயர், வாழைப்பிஞ்சு, வெண்டைப்பிஞ்சு, முருங்கைக்காய், காம்புதடிப்பாயுள்ளகத்தரிப்பிஞ்சு, பலாப்பிஞ்சு, வாழைப்பூ,

பாகற்காய், அவரைக்காய், மாங்காய் வடு, கிளாக்காய், கொத்தவரைப் பிஞ்சு, தூதுவளங்காய், தேங்காய், கருணை, சேம்பு, முள்ளங்கி, வள்ளி, உருளை, முதலானகிழங்குகள், வெங்காயம், பசுவநெய், பலநெய், அரைக்கீரை, தூதுவளங்கீரை, முருங்கைக்கீரை, மாங்காய் ஊறுகாய், காரமானதும் தித்திப்பானதுமான பதார்த்தங்களுமேயாம்.

கொத்தமல்லிக் காப்பியை ஒருக்காலும் உபயோகப் படுத்தவே கூடாது.

ஸ்திரீகளுடைய சரீரத்தைப் போஷிக்கக்கூடிய பதார்த்தங்களாவன.

வாழைக்காய், பூசனிக்காய், பெரும்பூசனிக்காய், சுரைக்காய், பாடவரைக்காய், வெள்ளரிக்காய், கொத்தவரைக்காய், பீர்க்கங்காய், புடலங்காய், கொமட்டிக்காய், எலுமிச்சம்பழம், கீரைத்தண்டு, வாழைத்தண்டு, முளைக்கீரை, அகத்திக்கீரை, பசளைக்கீரை, வீழிக்கீரை, குப்பைக்கீரை, பலகீரை, பயர்வகைகள், எலுமிச்சைஊறுகாய், புளிப்பு, துவர்ப்பு, கைப்புள்ள வஸ்துக்களுமேயாம்.

ஸ்திரீபுருஷாள் இருபாலரும் சுண்டை, பாகல் தவிர மற்றத் திவசு வத்தல்களை இரவில் உபயோகப் படுத்துவது சுகம். நெல்லி, இஞ்சி, கீரை, தயிர், பாகற்காய், இவைகளை யிரவில் உபயோகப்படுத்துதல் கூடாவாம்.

பழவர்க்கத்தில் விளாம்பழம், ஆப்பிள், அதாவது சீமை இலந்தைப்பழம், மாதுளம்பழம், நாரத்தம் பழம், சிறுமலைப்பழம், வெண்நாவற்பழம், பேரீச்சம் பழம், தமரத்தம்பழம், கொய்யாப் பழம், கொடிமுந்திரிப்பழம், இவைகளையருந்துவது மிகவும் உத்தமம்.

மாமிச பட்சணத்தில் வெள்ளாடு, கொடியாடு, வரையாடு, கலைமான், முயல், உடும்பு, வெள்ளெலி, கருங்கோழி, கானங்கோழி, வான்கோழி, சம்பங்கோழி, காடை, கவுதாரி, ஊர்க்குருவி, சிட்டுக்குருவி, உள்ளான், மயில், குயில், வெள்ளைப்புறா இவைகளையும், மச்சவகையில் அறக்கிளாவரால், அயிரை, பேராரால், சுறா, கருந்திருக்கை, உல்லம், வெள்வாவல், விலாங்கு, கிழங்கான்முதலியவைகளையும் அருந்துதல்சுகத்தைக்கொடுக்கும்.

இராத்திரி போசனத்தின்பேரில் பால் சாப்பிட வேணுமே யொழிய பகற்காலத்தில் அனுஷ்டிப்பது உசிதமல்ல. உண்டபின்பு ஒரேவென்னீர் அருந்தவேண்டியது. அதனால் கால்ரா, பிளேக், அசீரணம், சுரமுதலான கொடிய வியாதிகளணுகாவாம். சாப்பிடுமத்தியில் தண்ணீர் குடிப்பது நன்மையில்லை. இரவில் போசனஞ்செய்தபிற்பாடு குறைந்தபக்ஷம் 108 அடியாவது உலாவித்திரிந்து அப்பால் சயனித்துக்கொள்ள வேண்டியது. எப்பொழுதும் கிழக்குத் தெற்குத் திக்கிலேயே சிரசுவைத்து நித்திரைபுரிவதும் சாப்பிடுதல், தைலமிட்டுக்கொள்ளுதல் வபனஞ்செய்துகொள்ளுதலுக்கு கிழக்குத்திக்கும் உத்தமமாம் புருஷாள்சயனித்தபின்புஸ்திரீகள்சயனிக்க வேண்டியது.புருஷாள்நித்திரையினின்றும் எழுந்திருக்குமுன்னதாகவே ஸ்திரீகள் அதிகாலையிலெழவேண்டியது. ஸ்திரீகள் மங்களவாரத்தில் தைல ஸ்நானஞ்செய்வது உத்தமமல்ல. சுக்கிரவாரம் நன்மையைக் கொடுக்கும்.

ஸ்திரீ புருஷாள் இருபாலரும் எப்போதும் இரவு 1மணி முதல் மறுநாள் பகல் பனிரண்டு மணிவரையிலும் வடக்குமுகமாகவும், பகல் ஒருமணிமுதல் இரவு பனிரண்டுமணி வரையிலும் தெற்குமுக மாகவுமிருந்து மலஜலங்கள் கழிப்பது நன்று.

வருடப்பிறப்பு, மாதப்பிறப்பு, அமாவாசை. பௌரணமி, பிரதமை, அஷ்டமி, நவமி, சஷ்டி, ஏகாதசி, சதுர்த்தசி, பிதிர்தினம்,விரததினம், ஸ்திரீகள் மாதவிடாயாயிருக்குங்காலங்கள், தைலஸ்நானம், வபனஞ் செய்துகொண்ட தினம், கரிநாள், மரணயோக தினம், கிரகணதினம் இந்நாட்களில் ஸ்திரீபூமான்கள் சம்ஸர்க்கம் புரிவதுகூடாது. மேற்கண்டதினங்கள் தவிர மற்ற நாட்களில் ஸ்திரீ பூமான்கள் விலகியிருக்கக் கூடாதென இல்லற சயனநூலில் சொல்லப்பட்டு மிருக்கின்றது. மேற்சொல்லிய தினங்களில் கலவித்தொழில் புரிவது கூடாதென ஸ்மிருதிகளும் ஓலமிடுகின்றன.

மேலே குறிப்பிட்டிருக்கின்றவைகளிற் கூடியமட்டும் ஒரு குடும்பத்திலுள்ள ஸ்திரீபுருஷாள் வழுவாது நடப்பார்களாகில், அதுவே இல்லற தருமத்திற்கும், இகபர சாதகத்திற்கும் போதுமான நன்மையைப் பயக்குமென நூலாசிரியர்களுடையவும் நமது முன்னோர்களுடையவும் நம்முடையவும் அனுபவ சித்தாந்தமாதலால் அதின்படி வழுவாது நடைபெற்றொழுகல் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

மேற்கண்ட ஜோதிட வைத்திய முதலியவைகளை ஷ்டோ சாக்ஷாத் சடாட்சரப்பொருளாகிய சிவ சுப்பிரமணியக்கடவுளது திருவருட்பிரசாத மகிமையால் கூடியவரை பார்த்துச் சுகப்படுத்தலா மென்றெண்ணியிருந்த நம்மைச் சில நண்பர்கள் வெகுநாளாக இந்தக்கேட்லாக்கைப் பிரசித்தஞ் செய்ய வேணுமென்று கேட்டுக்கொண்டதின் பேரில் குறைந்த விலைகளையும் சார்ஜையும் ஏற்படுத்திப் பொது நன்மைக்காகவே இதைப் பயிரங்கப் படுத்தலானோ மாகையால் இதை வாசிக்கும் நண்பர்கள் தங்கள் தங்கள் இஷ்டமித்திர பெநதுக்களுக்கும் தெரிவிப்பார்களென நமபுகின்றோம். சுபம்.

சண்முகநாதன் துணை.

தங்கள்.

**கெ. வி. கோவிந்தசாமி அன்கோ**

ஜோதிட வைத்தியம்,

மேலச் சித்திரை வீதி,

மதுரை.

# அறிவிப்பு.

ஐயா!

இந்தக் காட்லாக்கை பூராப்படித்து தாங்களுக்கு வேண்டிய மருத்துகளை கைகொண்டு சுகத்தை யடைவது டன் தங்களுடைய இஷ்டர்களுக்குந் தெரிவித்து வேண்டிய மருந்துகளைவாங்கும்படி செய்யக்கோருகிறேன் இதில் கண்ட மருந்துக்களெல்லாம் அநுபோகசித்திபெற்ற மருந்துகள் வாங்கி ஒருமுறை சாப்பிட்டு பிரமானந்த மடையக் கோருகிறேன்.

இப்படிக்கு.

**கே. வி. கோவிந்தசாமி அன்கோ,**

சோஸியம், வைத்தியம்

மேலச்சித்திரைவீதி

மதுரை.